# Salve Regina





ஜூன் & ஜூலை 2009

SOCIETY OF ST. PIUS X

மலர்: 4 இதழ்: 6 & 7

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# Salve Regina


"கத்தோலிக்கப் பத்திரிகைகளை வெளியிட்டு நேரிய கருத்துள்ளவர்களுக்கு வழங்கினால் மட்டும் போதாது; அனைவராலும் அவை வாசிக்கப்படும்படியாக முடிந்தவரையில் அவற்றைப் பரப்புவதும், குறிப்பாக அவர்களிடமுள்ள நச்சுக் கலந்த தீய புத்தகங்களை, கிறீஸ்தவப் பிறர்சிநேகம் தவறாமல் அகற்றியெறிவதும் அவசியமாகும்."

– பாப்பரசர் அர்ச். 10–ம் பத்திநாதர்.


**ஆசிரியர் & வெளியிடுவோர்**

சங். வளன் D. ராஜகுமார்

**உதவி ஆசிரியர்**

திரு. P. பிரான்சீஸ் குமார்

**கட்டுரையாளர்கள்**

சங். ஜோஸப் ஃபைஃபர்

Dr. S. வின்ஸென்ட்

திரு. L.M. அந்தோணி

திரு. P. J. டேவிட்.

Dr. R. அருள் ஞானராஜ்

**வடிவமைப்பு**

T.V. ரொசாரியோ

**விநியோகம்**

திரு. P. போத்திராஜ்

திரு. R.P. இருதயராஜ்

திரு. M. இன்னோசென்ட்

திரு. A. கிளமெண்ட்

திரு. T. வின்ஸென்ட் ராய்ஸ்

திரு. C. சந்தானராஜ்

திரு. R. பயஸ் ஜெபசிங்

திரு. R. மிக்கேலஸ்

திரு. G. அருள் மரிய விக்டர்

**நன்கொடைகள், கடிதங்கள்**

**அனுப்ப வேண்டிய முகவரி**

Rev. Fr. Valan Rajakumar

'Salve Regina'

Marcel Lefebvre Place

8A/3, Annie Nagar, Seevalaperi Road

Palayamkottai - 627002.

✆ 0462 - 2586201 ; 2572389.

Mobile: 94426 25158.

**அச்சிடுவோர்**

மாதாவின் சூசை அச்சகம்

தூத்துக்குடி – 2


சேசுக்கிறீஸ்துநாதரில் அன்பார்ந்தவர்களே,

நமது பரிசுத்த பாப்பரசர் இந்த ஆண்டை குருக்களின் ஆண்டாக அறிவித்துள்ளார். குருக்களின் பாதுகாவலரான அர்ச். ஜான் மரிய வியான்னி மரித்து 150வது ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டே இந்தப் புனித ஆண்டை அறிவித்துள்ளார். குருக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த புனித ஆண்டை சிறப்பிக்கும்படியாக அர்ச். வியான்னி குருத்துவத்தைப்பற்றி போதித்துள்ள ஞானோபதேசத்திலிருந்து சில வரிகளை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். குருத்துவம் பற்றிய உண்மையான அர்த்தத்தை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது என்று நான் கருதுகிறேன். ஏனெனில், நாம் கடந்த இதழ்களில் குறிப்பிட்டிருந்தது போல் சர்வேசுரனுக்கு ஊழியம் செய்ய தங்களையே அர்ப்பணிக்க அநேக இளைஞர்கள் முன்வருவதில்லை. அப்படி வந்தவர்களில் 90 சதவீதமான குருமாணவர்கள் சுத்த கருத்து இல்லாமல் தவறான காரணங்களுக்காக சேர்ந்துள்ளனர்!! இந்த சமயத்தில் நமது அர்ச். 10-ம் பத்திநாதர் சபை - அதாவது இந்த ஆண்டு சேசுவின் திரு இருதய திருநாளன்று (19.06.2006) அமெரிக்காவில் வினோனாவிலுள்ள அர்ச். தாமஸ் அக்வினாஸ் குருமடத்தில் 13 புதிய குருக்களும், அர்ச். இராயப்பர், சின்னப்பர் திருநாளின்போது (30.06.2009) சுவிட்சர்லாந்தில் ஈக்கோனிலுள்ள பெரிய குருமடத்தில் 8 பேரும்; ஜுன் 27-ம் நாளன்று ஜெர்மனியில் Zaitzkofen-ல் உள்ள திரு இருதய குருமடத்தில் 3 பேர்களும் குருப்பட்டம் பெற்ற செய்தியை உங்களுக்கு அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

குருத்துவத்தைப்பற்றி கூறும்போது அர்ச். மரிய வியான்னி "பரிசுத்த குருத்துவம் என்ற இந்த தேவதிரவிய அநுமானம் மனிதனை கடவுள் வரையிலும் உயர்த்துகிறது" என்கிறார். இதுபற்றி மேலும் கூறுகையில் "அர்ச். பெர்னார்டு ஒவ்வொரு வரப்பிரசாதமும் மரியாயின் வழியாகவே நமக்கு வருகிறது என்று போதிக்கிறார். அவரது வார்த்தைகளை நமதாக்கி, நாமும் குரு வழியாகவே ஒவ்வொரு ஆசீரும் நமக்கு வருகிறது என்று கூறலாம். ஆம்! அனைத்து மகிழ்ச்சிகள், எல்லா வரப்பிரசாதங்கள், அனைத்துப் பரலோகக் கொடைகளும் குருவானவர் வழியாகவே நமக்கு வருகிறது. எப்படியெனில், குருத்துவம் என்ற இந்த தேவதிரவிய அநுமானத்தை நாம் கொண்டிருக்கவில்லையென்றால் நாம் நமதாண்டவரின் உண்மை பிரசன்னத்தை திவ்விநற்கருணை பேழையில் கொண்டிருக்க மாட்டோம். உங்களது ஆன்மாவை இம்மையிலிருந்து மறுமை (முடிவில்லா) வாழ்வுக்கு வழிநடத்திச் செல்வது யார்? - குரு. ஆன்மாவின் அந்தப் பயணத்தில் அதனைப் போஷித்து, அதற்கு திடம் தருவது யார்? - குரு. இறுதியாக, அந்த ஆன்மாவை சேசுக்கிறீஸ்துவின் திரு இரத்தத்தால் கழுவி சர்வேசுரன் முன் நிற்பதற்கு அதனைத் தயாரிப்பது யார்? - குரு. ஆம். குருதான்!! மரண சமயத்தில் ஆன்மாவை மேலே பரலோக சிந்தனைகளால நிரப்பி, சர்வேசுரனை நோக்கி உயர்த்தி, அதற்கு அமைதியையும், சமாதானத்தையும் பெற்றுத் தந்து தேற்றுவது யார் என்று கேட்டாலும், அதுவும்கூட குருதான்! கடவுளிடமிருந்து வரும் எந்த ஒரு ஆசீர்வாதமும் குருவின் உதவியில்லாமல் பெற்றதாக உங்களால் நினைத்துப் பார்க்கவும் முடியாது" என்று கூறுகிறார்.

மேலும் கூறும்போது, "பாவங்களை சங்கீர்த்தனம் செய்ய பரி. கன்னிகையிடமோ அல்லது ஒரு சம்மனசிடமோ செல்லுங்கள். அவர்களால் உங்களுக்குப் பாவப்

பொறுத்தல் ஆசீர்வாதம் தரமுடியுமா? முடியாது. அவர்களால் நமதாண்டவரின் திரு சரீரத்தையும் திரு இரத்தத்தையும் வழங்க முடியுமா? முடியாது. பரி. கன்னிகையால் அவர்களது தெய்வீக குமாரனை அப்பத்தினுள் இறங்கி வர செய்ய முடியாது; உங்களுக்கு 200 சம்மனசுகள் கூட இருந்தாலும், அவர்களால் உங்களுக்கு பாவப் பொறுத்தல் கொடுக்க முடியாது! ஒரு குருவானவர் அவர் எவ்வளவுதான் எளிமையானவராக இருந்தாலும் இதனைச் செய்ய முடியும் - "நான் உன்னை மன்னிக்கிறேன். சமாதானத்துடன் போ" என்று உங்களுக்குச் சொல்ல முடியும்.

ஒரு குருவானவர் தனக்காக ஒரு குருவாக இருப்பதில்லை; அவர் தனக்குத் தானே பாவப் பொறுத்தல் ஆசீர்வாதம் வழங்குவதில்லை; அவர் தனக்குத் தானே தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றுவதில்லை. அவர் தனக்காக அல்லாமல், உங்களுக்காக இருக்கிறார். சர்வேசுரனுக்கு அடுத்தபடியாக குருவானவரே எல்லாமாக இருக்கிறார். ஒரு பங்கை 20 வருடங்களுக்கு குருவானவர் இல்லாமல் விட்டு வையுங்கள். அது என்னவாகும்? அங்கே சாத்தான்தான் குடியிருப்பான். போதக குருவும் (அர்ச். வியான்னியாருக்கு உதவி செய்ய வந்த குரு), நானும் உங்களை விட்டுவிட்டு சென்றுவிட்டோம் என்று வைத்துக்கொண்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்?... "பூசை இல்லையென்றால், இந்த ஆலயத்தை வைத்துக்கொண்டு (பங்கு மக்களாகிய) நாங்கள் என்ன செய்வோம்? நமதாண்டவரின் நற்கருணைப் பிரசன்னம் ஆலயத்தில் இல்லையென்றால், நாங்கள் வீட்டிலேயே ஜெபித்துக் கொள்வோம்" என்றுதானே கூறுவீர்கள்?! ஆம்! எதிரிகள் வேதத்தை அழிக்க விரும்பும்போது, அவர்கள் குருக்களைத் தான் (-குருத்துவத்தைத்தான்) முதலில் தாக்கத் துவங்கு வார்கள். ஏனெனில், எங்கே குருவானவர் (-குருத்துவம்) இல்லையோ அங்கே திவ்விய பலிபூசை இருக்காது. எங்கே திவ்விய பலிபூசை இல்லையோ, அங்கே வேதம் இருக்காது..."

அன்பார்ந்த சகோதரர்களே மேலே கண்ட சிந்தனைகள், குருத்துவம் எத்துணை மகா உன்னதமானது என்பதை நமக்கு உணர்த்துகிறது. சரி, இத்தகைய குருக்கள் எங்கிருந்து வரக்கூடும்? மேலே மோட்சத்திலிருந்து வந்தவர்களா? இல்லை! குருவானவர் உங்கள் குடும்பத்தி லிருந்து வருகின்றார்! உங்கள் குடும்பம்தான் முதல் குருமடம்; குருத்துவம் விதைக்கப்படும் இடம். அன்பார்ந்த பெற்றோர்களே! நமதாண்டவர் சேசுக்கிறீஸ்து வின் குருத்துவத்தின் மூலமாக சர்வேசுரனுக்கு ஊழியம் செய்யும் ஆவலை உங்கள் பிள்ளைகளுக்கு மூட்டுவது உங்கள் பொறுப்புதான். உங்கள் குழந்தைகள் புண்ணியத்திலும் , வரப்பிரசாதத்திலும் வளர்வதைக் கண்காணிப்பதும் உங்கள் பொறுப்புதான். உங்கள் பிள்ளைகள் தங்களின் ஞானஸ்நான பரிசுத்தத்தனத்தில் வாழ்வதை உறுதிசெய் வது உங்களுடைய பொறுப்புதான். இது எப்படி சாத்திய மாகும்? நீங்கள் உங்கள் எடுத்துக்காட்டான வாழ்வால் உங்கள் பிள்ளைகளை தேவதிரவிய அநுமான வாழ்வுக்கு இட்டுச்செல்ல வேண்டும். அதாவது அவர்களை ஊக்கப் படுத்தும்படியாக நீங்கள் அடிக்கடி பாவசங்கீர்த்தனம், திவ்விய நற்கருணை பெறவேண்டும். உங்களது குழந்தை களின் "பரிசுத்ததனம்" என்னும் புண்ணியத்தை மாசு படுத்தும் தொலைக்காட்சி, கெட்டப்புத்தகங்கள் அனைத் தையும் அகற்ற வேண்டும். ஒவ்வொரு நாளும் குடும்ப ஜெபத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

அன்பார்ந்த வாசகர்களே! இந்த ஆண்டு நமக்கு அநேக புதிய குருக்களை வழங்க சித்தம் கொண்ட சர்வே சுரனுக்கு நன்றி கூறுவோமாக. புதிய குருக்களுக்காகவும், அவர்கள் இறுதிவரை தங்களின் தேவ அழைத்தலில் நிலைத்திருக்கும்படியாகவும் ஜெபிப்போமாக. இந்த குருக்களின் ஆண்டில் குருக்களுக்காக ஜெபித்து, திருச்சபை திறந்துவிட்டிருக்கும் ஞானக் கருவூலத்திலிருந்து அதிக மதிகமான ஞானப்பலன்களை அடைந்து குருக்களுக்காக ஒப்புக்கொடுப்போமாக! தேவ அழைத்தல்கள் பெருகும் படியாக மன்றாடி, ஏராளமான குருத்துவ துறவற தேவ அழைத்தல்கள் பெருக மன்றாடுவோமாக!

**PAX VOBIS**

**சங். வளன் D.ராஜகுமார் சுவாமி**
**அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை,**
பாளையங்கோட்டை.

**ஆண்டவரே எங்களுக்கு குருக்களைத் தாரும்!**
**ஆண்டவரே எங்களுக்கு பரிசுத்தக் குருக்களைத் தாரும்!**
**ஆண்டவரே எங்களுக்கு அநேக பரிசுத்தக் குருக்களைத் தாரும்!**
**ஆண்டவரே எங்களுக்கு அநேக பரிசுத்த துறவற அழைத்தல்களைத் தாரும்!**

# பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்

## I. விசுவாசத்தின்பேரில் வியாக்கியானம் (தொடர்ச்சி)

**3. விசுவசிக்கவேண்டியதென்ன?** சர்வேசுரன் நமக்கு அறிவித்திருக்கும் சகல சத்தியங்களையும் பொதுவாய் விசுவசிக்கிறதுமன்றி, அர்ச். பாப்பானவர் தனியேயாவது, பொதுச்சங்கங்களில் கூடிய மேற்றிராணிமார்களோடாவது, நமக்குப் போதிக்கும் ஒவ்வொரு சத்தியத்தையும், பூலோகத்தில் எவ்விடங்களிலும் ஒரே மன ஒற்றுமையாய் விசுவசிக்கப்படும் சகல சத்தியங்களையும், நாமெல்லோரும் விசேஷ விதமாய் விசுவசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் விசுவசிக்கவேண்டிய வேத சத்தியங்களெல்லாம் அப்போஸ்தலர் மரணத்துக்கு முன்னேயே வெளிப்படுத்தப்பட்டன. அதற்குப்பின் சர்வேசுரன் சகலராலும் விசுவசிக்கப்படவேண்டிய வேத சத்தியம் யாதொன்றும் அறிவிக்கவில்லை.

1) **முந்தமுந்த விசுவசிக்கவேண்டியது ஏதென்றால், சர்வேசுரன் உண்டென்றும்,** தமக்கு ஊழியம் பண்ணுகிறவர்களுக்கு நித்திய பாக்கியம் தந்தருள்வாரென்றும், மோட்சகரையேறும்படி விசுவசிக்கக் கடனுண்டென்று அர்ச். சின்னப்பர் எழுதிவைத்தார். இது இப்படியிருக்க, பெரிய மனிதர்களுக்குமாத்திரமல்ல, புத்தி விவரமறிந்த எந்தப் பையனுக்கும் மரண அவஸ்தையின் போது முதலாய், ஞானஸ்நானம் கொடுக்குமுன் இந்தச் சத்தியங்களைப் படிப்பிப்பது முற்றிலும் அவசியம்.

2) வேண்டிய நேரமிருக்குமாகில், **ஏக சர்வேசுரன் ஆள்வகையில் திரித்துவமாயிருக்கிறாரென்றும், இரண்டாம் ஆளாகிய சர்வேசுரன் நம்மை இரட்சிக்கும்படி மனிதனாய்ப் பிறந்து மரணமடைந்தா**ரென்றும் கூடியமட்டும் அவனுக்கு அறிவிக்கவேண்டும். அதற்குப்பின் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

3) வியாதிக்காரன் சௌக்கியமடைந்தால், **சகல கிறீஸ்தவர்களும் அறியவேண்டிய வேத சத்தியங்கள்,** தேவ கற்பனைகள், திருச்சபைக் கட்டளைகள், தேவதிரவிய அநுமானங்கள் முதலியவைகளைப்பற்றியும், தன்புத்தி, வயது, படிப்பு, அந்தஸ்துக்குத் தக்கபடி கற்றுக்கொள்ளவேண்டுமென்பது கண்டிப்பான கட்டளை.

**4. நாம் உறுதியாய் விசுவசிக்கிறதற்குள்ள காரணமென்ன?** நமது விசுவாசம் மனித சுபாவத்துக்கு மேற்பட்ட புண்ணியமாயிருக்கிறதினால், சர்வேசுரனுடைய வரப்பிரசாத உதவியில்லாமல், இந்தப் புண்ணியத்தின் முயற்சி யாதொன்றும் செய்யமுடியாது. தேவ உதவி அவசியம் நமக்கு வேண்டியிருக்கிறது. நமது சுபாவ புத்தியினால் நினைக்கவும் கண்டுபிடிக்கவும் முடியாத சத்தியங்களை இந்தத் தேவ உதவியைக் கொண்டே விசுவசிக்கிறோம். சர்வேசுரன்தாமே இவைகளை அறிந்திராவிட்டால், இவைகளை நாம் எப்படி அறிந்திருக்க முடியும்? முடியாதல்லவா? ஆகையினால் சர்வேசுரன் வெளிப்படுத்தியிருப்பதினாலே மாத்திரம் வேத சத்தியங்களையெல்லாம் விசுவசிக்கிறோம்.

1) **தேவ வரப்பிரசாதத்தைக்கொண்டு நாம் சர்வேசுரனுடைய வார்த்தையை விசுவசிக்கிறதினால், யாதொரு சந்தேகத்திற்கும் இடமிருக்கக்கூடாது.** ஏனெனில், நமது புத்தியானது தெளிவாய்க் கண்டுபிடிப்பதினிமித்தம் விசுவசிக்காமல், அளவில்லாத சத்திய சுரூபியாகிய சர்வேசுரன் வெளிப்படுத்தியிருப்பதினால் மாத்திரம் விசுவசிக்கிறோம். ஆதலால் ஒரேயொரு சத்தியத்தை முதலாய் ஒத்துக்கொள்ளாமல் மனமறியச் சந்தேகப்படுவோமாகில், இது சர்வேசுரனுடைய மட்டற்ற உண்மைத்தனத்தையே நிந்தித்து, மறுதலிப்பதற்கு ஒப்பாகும். இதனால் விசுவாசம் நம்மிடத்தில் முழுவதுமாக அழிந்துபோகும்.

2) **ஓர் அஞ்ஞானி நமது வேதத்தைப்பற்றிச் சந்தேகப்படுகிறது குற்றமா?** ஓர் அஞ்ஞானி வேதத்தைச் சரியாய் அறியுமட்டும், சந்தேகங்களுக்கு இடங்கொடுத்தால், அது குற்றமல்ல. ஆனால் இச்சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளவும், வேதத்தின் நியாயங்களை அறிந்தபின் மனந்திரும்பவும் அவனுக்கு கடனுண்டு. இக்கடமையை நிறைவேற்றாமல் வேண்டுமென்று அலட்சியம் செய்வானாகில் அவன் சாவான பாவ அந்தஸ்திலிருப்பான்.

3) **கிறீஸ்தவனோவென்றால், ஓர் நிமிஷ முதலாய் விசுவாசத்துக்கு விரோதமான சந்தேகங்களுக்கு இடங்கொடுக்கக் கூடாது.** அவன் ஞானஸ்நானம் பெறும்போது, தன் ஆத்துமத்தில் நிலையாய்க் குடிகொண்டிருக்கும்படி தேவ சம்பந்தமான புண்ணியமாகிய விசுவாசத்தையும், மற்றப் புண்ணியங்களையும், சர்வேசுரனிடமிருந்து அடைந்திருக்கிறான். நமது வேதத்தை அறிந்தபிறகு, மெய்யாக சந்தேகப்படுவதற்கு ஒருபோதும் சரியான காரணமிருக்காது. சர்வேசுரன் நமது இருதயத்தில் தாராளமாய்ப் பொழியும் வரப்பிரசாதங்களும், தவறக்கூடாத திருச்சபையின் போதனைகளும் நமக்கு ஒத்தாசையாயிருப்பதால், சந்தேகப்படுவதற்கு சிறிதேனும் இடமில்லை. ஆதலால் எவ்வித சந்தேகங்கள் வந்தபோதிலும், அவைகளை உடனே தள்ளிப்போடவேண்டும். இப்பேர்ப்பட்ட சோதனைகள் வரும்போதெல்லாம் மகா தாழ்ச்சியோடே ஜெபம் செய்யக்கடவோம்.

4) **நமது சந்தேகங்களைத் தீர்க்க, சேசுநாதர்சுவாமி நியமித்திருக்கும் வழியென்ன?** வேத சத்தியங்களை நாம் அறிந்து விசுவசிக்கும்படி சேசுநாதர்சுவாமி தமது தவறாத திருச்சபையை ஸ்தாபித்திருக்கிறார். "திருச்சபை தேவ சித்தப்படி இப்பூலோகத்திலிருக்கிற சகல மனிதர்களையும் திவ்விய ஒளியினாலே பிரகாசிப்பித்து, மெய்யான வேதத்தைப் போதித்து, தன்னை அறியாதவர்களை அழைத்துச் சேர்க்க சர்வ பிரயாசைப்படுகிறது. மேலும் தன்னுடைய பிள்ளைகளாகிய கிறீஸ்தவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, அவர்கள் சந்தேகங்களைத் தீர்த்து, மாறாத விசுவாசத்தின் அஸ்திவாரத்தில் அசையாதவிதமாய் அவர்களை ஸ்தாபிக்கிறதே" திருச்சபை மனுக்குலத்துக்குச் செய்துவரும் விலைமதியாத உபகாரமாம்; இதுவே வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினை.

5) **அது இப்படியிருக்க, சந்தேக விஷயத்தில் கிறீஸ்தவர்களும் அஞ்ஞானிகளும் ஒரே ஸ்திதியில் இல்லை.** அஞ்ஞானி தனது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளுகிறதற்கு முன், எது வேத சத்தியமென்று நிச்சயமாய் அவனுக்குத் தெரியாது. ஆதலால் இவ்வித மெய்யான சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும் வரையில், யாதொரு வேதத்தைத் தெரிந்துகொள்ளுகிறதற்கு அவனுக்குக் கடமையுமில்லை, விசேஷ நியாயமுமில்லை. அவன் ஒருபோதும் திருச்சபையை விசுவசிக்கவுமில்லை, வேத சத்தியங்களை இன்னும் ஒத்துக்கொள்ளவுமில்லை. தேவ இஷ்டப்பிரசாதத்தையும் ஆத்துமத்தில் அடையவில்லை.

(தொடரும்)

# குருக்கள் ஆண்டிற்கான விசேஷ பலன்!

ஆர்ஸ் நகர பங்கு குருவான அர்ச். மரிய வியானி அருளப்பருடைய மறைவின் 150-வது ஆண்டு நிறைவையொட்டி, பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பர் 2009 ஜுன் 19-ம் தேதி தொடங்கி அடுத்த வருடம் 2010 ஜுன் 19-ம் தேதி வரையுள்ள ஆண்டை குருக்களின் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார். இக்குருக்கள் ஆண்டின் பரிசாக விசேஷ பலன்களையும் அறிவித்திருக்கிறார். இதற்கான ஆணையைப் பாவப்பொறுத்தலுக்கான அப்போஸ்தலிக்க சங்கம் மே மாதம் 12-ம் தேதியன்று வெளியிட்டது.

குருக்களுக்கு உண்மையான மேய்ப்பனின் மாதிரியாகவும், பங்கு குருக்களின் பாதுகாவலர் என்று திருச்சபையால் அறிவிக்கப்பட்டவருமான அர்ச். வியானி அருளப்பருடைய புண்ணியங்களை கண்டுபாவிக்கும் வண்ணமாக குருக்களுக்கு ஊக்கம் தரும் வகையிலும், விசுவாசிகள் தங்களின் ஞான தகப்பனாகிய குருக்களுக்காகவும், குருத்துவ தேவ அழைத்தல்கள் பெருகும்படியாகவும் ஜெபிக்கும் கடமையை அவர்களுக்கு உணர்த்தும்படியாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிற இந்த குருக்கள் ஆண்டில் திருச்சபையின் ஞான கருவூலத்திலிருந்து பலன்களைப் பெறுவதற்கு கீழே தரப்பட்டுள்ள காரியங்களில் ஒன்றை செய்யவேண்டும்:

## 1. குருக்களுக்கு

மெய்யான மனஸ்தாபத்தோடு, ஏதேனும் ஒரு நாளில் **காலை ஜெபம்** (Lauds) அல்லது **மாலை ஜெபத்தை** (Vespers) பக்தியோடு திவ்விய நற்கருணையின் முன்பாக ஜெபித்து, அர்ச். வியானி அருளப்பருடைய முன்மாதிரிகையை பின்பற்றி தங்களை முழுவதுமாக அமைந்த மனதுடனும், தாராளமனதுடனும் தேவதிரவிய அநுமானங்களை குறிப்பாக, பாவசங்கீர்த்தனம் என்ற தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினால், முழு பரிபூரணபலனை அடைந்துக்கொள்ள முடியும். இதற்கு வழக்கமாக செய்யவேண்டிய காரியங்களாகிய பாவசங்கீர்த்தனமும், தேவநற்கருணையை உட்கொள்ளுதல் மற்றும் பாப்பானவருடைய கருத்திற்காக வேண்டிக்கொள்ளல் போன்றவைகளும் செய்யப்படவேண்டும். இப்பலனை மரித்த பிற குருக்களின் ஆத்துமங்களுக்காகவும் ஒப்புக்கொடுக்கலாம்.

அதோடு, ஒவ்வொரு முறையும், பரிசுத்த ஜீவியத்தை ஜீவிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஜெபங்களை பக்தியுடன் ஜெபித்து, தங்களுடைய குருத்துவ கடமைகளை பரிசுத்தமாய் நிறைவேற்றும்போது, குருக்கள் உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படுகிற மற்ற குருக்களின் ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுக்கக்கூடிய பகுதிபலன்களை (Partial Indulgence) அடைந்துகொள்ளலாம்.

## 2. விசுவாசிகளுக்கு

மெய்யான மனஸ்தாபத்துடன் ஒரு தேவாலயத்திலோ அல்லது சிற்றாலயத்திலோ பக்தி உருக்கத்தோடே திவ்விய பலிபூசையைக் கண்டு நித்திய குருவாகிய சேசுகிறீஸ்துநாதரிடம் திருச்சபையின் குருக்களுக்காக ஜெபித்து, அந்த நாளில் அவர்கள் செய்த நற்கிரியைகளை அவர்தாமே அர்ச்சித்து, தன்னுடைய திருஇருதயத்திற்கு ஏற்றதாய் மாற்றும்படியாக மன்றாடி, வழக்கமாக பலன்களை பெறுவதற்கு உள்ள நிபந்தனைகளாகிய பாவசங்கீர்த்தனம் - திவ்விய நற்கருணை உட்கொள்ளல் - பாப்பரசருடைய கருத்திற்காக மன்றாடுதல் போன்றவைகளை நிறைவேற்றுபவர்கள் கீழ்க்காணும் நாட்களில் ஒரு பரிபூரண பலனை அடைந்துகொள்ளலாம்.

✸ குருக்கள் ஆண்டு துவங்கும் மற்றும் முடியும் நாட்கள், ✸ அர்ச். வியானி அருளப்பர் மரித்த ஆகஸ்ட் 4-ம் தேதி,

✸ மாதத்தின் முதல் வியாழக்கிழமை அல்லது தல மேற்றிராணியாரால் இதற்கென்று ஒதுக்கப்பட்ட நாட்கள்.

வயதானவர்களுக்கும், நோயாளிகளுக்கும், தகுந்த காரணங்களால் தங்கள் இல்லிடம்விட்டு வெளியே வர இயலாதவர்களுக்கும் - எவ்வித பாவத்திலிருந்தும் தங்கள் மனதை விலக்கி, வழக்கமாக நிறைவேற்றவேண்டிய நிபந்தனைகளை (பாவசங்கீர்த்தனம், திவ்விய நற்கருணை உட்கொள்ளல், பாப்பரசர் கருத்துக்காக ஜெபித்தல்) நிறைவேற்றும் கருத்தோடு வீட்டிலிருந்தவாறே மேலே குறிப்பிட்ட நாட்களில் குருக்களின் அர்ச்சிப்பிற்காக வேண்டிக்கொண்டு; தங்கள் நோயினால் ஏற்படும் துன்ப வருத்தங்களை அமைந்த மனதோடு ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுடன் அப்போஸ்தலர்களுடைய இராக்கினியாகிய மரியாயின் வழியாக சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தால் ஒரு பரிபூரண பலனை அடையலாம்.

இறுதியாகக, விசுவாசிகள் 5 பர., 5 அருள்நிறை., 5 திரி. ஜெபத்தை பக்தியோடு சொல்லும் ஒவ்வொரு முறையும், அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட சேசுவின் திரு இருதயத்திற்கு தோத்திரமாகவுள்ள ஜெபங்களை ஜெபித்து, குருக்கள் பரிசுத்த கற்பிலும், உத்தம ஜீவியத்திலும் நிலைத்திருக்கும்படியாக வேண்டிக்கொண்டால், ஒரு பகுதி பலனை பெற்றுக்கொள்ளலாம்.

தொடங்கியிருக்கும் குருக்கள் ஆண்டில் நமது தாயாகிய திருச்சபை தமது ஞான கருவூலத்திலிருந்து திறந்துவிட்டிருக்கும் இந்த ஞானப்பலன்களை மிகுந்த விசுவாசத்தோடும், அன்போடும் பெற்று, நமது குருக்களுக்காக ஒப்புக்கொடுப்போமாக!

# திருச்சபையில் நடப்பது என்ன?

(சகோ. தெரேசியான் பாபு சேவியர், குருமாணவர், அர்ச். தாமஸ் அக்குவினாஸ் குருமடம், வினோனா, அமெரிக்கா.)

*கடந்த ஜனவரி 21-ம் தேதியன்று பாப்பரசரிடமிருந்து வெளியிடப்பட்ட ஆணையைப்பற்றி நீங்கள் சால்வே ரெஜினா மூலம் அறிந்திருப்பீர்கள். அவ்வாணை ஏற்படுத்திய அதிர்வு அலைகளை தமிழகத்தில் ஒருவேளை உணராமல் இருந்திருக்கலாம். அதற்காக சர்வேசுரனுக்கு நான் நன்றி கூறுகிறேன். ஆனால் அவற்றின் எதிரொலி ஐரோப்பாவில் பூகம்பமாக வெடித்தது! பாப்பரசர் 16-ம் ஆசீர்வாதப்பருக்கு எதிரான போராட்டத்தில் திருச்சபையிலுள்ள முற்போக்கு வாதிகளும், இடதுசாரிகளும் குதித்தனர். சில ஆயர்கள் பாப்பரசர் பதவி விலகவேண்டுமென்று கோரினர். திருச்சபையில் மட்டுமல்லாது, அரசியலிலும்கூட இது ஒலித்தது. ஜெர்மனியின் பிரதமர் இவ்விஷயத்திற்காக பாப்பரசர் மன்னிப்பு கேட்கவேண்டுமென்று ஆவேசத்துடன் பேசினார். ஆக, பாப்பரசருக்கு எதிர்ப்பு எந்த அளவுக்கு இருந்ததென்றால், தன்னுடைய ஆளுகையில் தான் சந்தித்த மிகப்பெரும் நெருக்கடி இதுவென்றும், தான் தனிமைப்படுத்தப்படுவதாகவும் வருத்தத்துடன் அனைத்து ஆயர்களுக்கு எழுதிய மடலில் பாப்பரசரே குறிப்பிட்டுள்ளார்!*

*இத்தகைய எதிர்ப்புக்கள் விசுவாசிகளாகிய நம்மை ஒன்றும் செய்யப்போவதில்லை. கடைசிநாளில் நம்மைத் தீர்க்கப்போவது மனிதர்கள் அல்ல - சர்வேசுரன் மட்டுமே. அவரை நேசித்து வாழ்ந்தால் மட்டுமே போதுமானது. அர்ச். சின்னப்பர் கூறுவது போல சர்வேசுரனை நேசிப்பவர்களுக்கு எல்லாம் கைகூடும். ஆனாலும் திருச்சபையில் 2-ம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு நடந்தது என்ன? இனி நடக்கப்போவது என்ன? என்பதை இங்கு காண்போம்.*

### திருச்சபையில் நடந்தது என்ன?

*கடந்த 150 ஆண்டுகளாக சர்வேசுரன் வெளிப்படுத்தின சத்தியங்களுக்கு மாறாக சிந்திக்கும் அழிவு முறை திருச்சபைக்குள் புக வெகுவாகப் போராடி வந்தது. அத்தகைய போராட்டமானது கடைசியில் 2-ம் வத்திக்கான் சங்கத்தில் வெற்றி கண்டது. இவ்வெற்றிக்கு காரணம் யார்? தாய் திருச்சபையைக் காட்டிக்கொடுத்தது யார்? பல பாப்புமார்களின் கண்டனத்திற்குப் பிறகும் எப்படி இந்தத் தப்பறை குருக்களையும் வேதசாஸ்திரிகளையும் கடைசியில் ஆயர்களையும் தன்கைவசப்படுத்தியது?! இதற்கு பல காரணங்கள் எதுவாக இருப்பினும் - மிக முக்கிய காரணம்: பாப்பரசர் 6-ம் சின்னப்பரின் அங்கீகாரம் தான்!! பல தப்பறைகளுக்கு அவர் காட்டிய அனுதாப ஆதரவு விஷமாய் மாறியது. அதற்குப்* பின் என்ன நேர்ந்தது என்பதை விளக்க அவசியமில்லை. கண்ணுடையோர் பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். இதுவரை *குற்றமாய் இருந்தவை சட்டங்களாய் மாறிவிட்டன. ஓநாய்களும் மந்தைக்குள் அனுமதிக்கப்பட்டன.*

இதனையெல்லாம் கண்டு, பலர் திருச்சபையை - அதன் உண்மையான போதகத்தை விட்டுவிட்டு "புது விசுவாசத்தை" ஏற்றுக்கொண்டனர். ஆனால் வெகு சிலரோ திருச்சபையின் உண்மையான போதகத்தை மட்டும் கைக்கொண்டு அதன்படி வாழ்ந்து வருகின்றனர். இதன் காரணமாய் தோன்றியதுதான் அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை. *1970-ல் திருச்சபையின் அங்கீகாரத்துடன் தொடங்கப்பட்ட இச்சபையின் ஒரே நோக்கம்:* "தான் பெற்றுக்கொண்ட விசுவாசத்தை பிறருக்கு வழங்கவேண்டும்" (Tradidi et quod accepi) என்பதேதான்.

*1988 ஜுன் 30-ம் நாள் இச்சபையின் மிக முக்கியமான நாள். தனக்குப் பிறகு, குருத்துவத்தையும், உண்மையான திவ்விய பலிபூசையையும் என்றும் பாதுகாக்க இச்சபையை காப்பாற்றவேண்டிய அவசியத்தால் வந். மார்சல் லெஃப்வர் ஆண்டகை அவர்கள் நான்கு குருக்களை மேற்றிராணிமார்களாக அபிஷேகம் செய்தார். இம்மாபெரும் செயல் திருச்சபையின் அதிகாரிகளுக்கு, முக்கியமாய் திருச்சபையின் விரோதிகளுக்கிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அப்போதைய பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பர் வந். மார்சல் ஆண்டகையையும் மற்றும் நான்கு மேற்றிராணிமார்களையும் திருச்சபையை விட்டு நீக்கம் செய்யும் ஆணையைப் பிறப்பித்தார்.*

*அந்த ஆணை தங்களுக்கு பொருந்தாது என்று அர்ச். பத்தாம் பத்திநாதர் சபை வாதாடி வந்தது. தப்புக்குத்தானே தண்டனை! தப்பே இல்லையென்றால் இந்த ஆணையை பெறுமாறு வந். ஃபெல்லே ஆண்டகை துவக்கிய ஜெபமாலை போர் வெகு சில காலத்தில் புதுமையை நிகழ்த்தியது. ஜனவரி 21-ம் தேதி வெளியிடப்பட்ட ஆணையே அப்புதுமை!!*

### நடக்கப்போவது என்ன?

*உரோமாபுரியுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்குமுன்னரே (2001) வந். ஃபெல்லே ஆண்டகையவர்கள் அர்ச். 10-ம் பத்திநாதர் சபையின் போக்கினை தெளிவாகத் தெரிவித்தார். முதலில் (1) பாரம்பரிய திவ்விய பலிபூசையை எவ்வித தடையுமின்றி எல்லாக் குருக்களும் நிறைவேற்ற அனுமதி; (2) அர்ச். 10-ம் பத்திநாதர் குருக்கள் சபையின் நான்கு மேற்றிராணிமார்கள் மீதான திருச்சபை விலக்கத்தை திரும்பப் பெறவேண்டுமென்ற 2 நிபந்தனைகளை நிறை வேற்றவேண்டும், பிறகு வேத சத்தியங்கள் குறித்தான உரையாடல்களை நிகழ்த்த வேண்டும். அதன்பின், அதாவது திருச்சபை அதிகாரிகள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருத்தம் செய்து பாரம்பரியத்திற்கு திரும்பும்போது தான் திருச்சபையில் சட்டரீதியாக இயங்க முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.*

***தொடர்ச்சி 9-ம் பக்கம் காண்க...***

# ‘Sanguis Martyrum Semen Christianorum’

## (வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துவர்களை விளைவிக்கும் வித்து!)

# கத்தோலிக்க விசுவாசத்திற்காக உயிர்நீத்தவர்களின் வரலாறு

(இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலிக்கன் புராட்டஸ்டாண்ட் பிரிவினையின் போது சத்திய கத். விசுவாசத்தில் உறுதியாக இருந்து பதிதத்தை மறுத்து தங்களுடைய இன்னுயிரை நீத்தவர்களின் வரலாறு இங்கே வெளியிடப்படுகிறது.)

## (6) அர்ச். பிலிப் ஹோவார்ட் (தொடர்ச்சி)

### தந்தையின் மரணம்!

*தாமஸ் ஹோவார்ட் தனது மூத்தமகன் பிலிப் ஹோவார்ட் சிறந்த கல்வி பெறவேண்டும், நல்லொழுக்க பண்புகளில் சிறந்து விளங்கவேண்டும் என்று விரும்பினார். அதற்காக அக்காலத்தில் புகழ்பெற்ற ஆசிரியரும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் அர்ச். ஜாண் கல்லூரியின் பேராசிரியருமான திரு. ஜார்ஜ் மார்டின் என்பவரை பிலிப்பின் ஆசிரியராக நியமித்தார். அக்காலத்தில் புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கிரேக்க, ஹீப்ரு மொழி அறிஞரான திரு. ஜார்ஜ் மார்ட்டின் புதிய புராட்டஸ்டாண்ட் மாற்றங்களை வெறுத்து கத்தோலிக்க மனப்பான்மையை கொண்டிருந்தார். அவர் கத்தோலிக்கராகி, பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று குருவாக எண்ணியிருந்தார். அவரது சீரிய வழிகாட்டுதலில் வளர்ந்த பிலிப்பின் உள்ளத்தில் கத்தோலிக்க விசுவாசத்தை விதைக்கச் செய்தது அவரே என்றால் மிகையாகாது. பின்னாளில் சிறைவாசத்தின் போது இவரைக் குறிப்பிட்டு எழுதிய பிலிப், தமது கத்தோலிக்க விசுவாசம் தமது உள்ளத்தில் வேரூன்றியதற்கு முதல் காரணம் தமது ஆசிரியர் திரு. ஜார்ஜ் மார்ட்டினே என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார்.*



(வீட்டுச் சிறையில் அர்ச். பிலிப் ஹோவார்ட்)

*1568-ம் ஆண்டில் ஒரு பெரிய சோதனை வந்து சேர்ந்தது. அது பிரபு தாமஸ் ஹோவார்ட்டின் செல்வாக்கிற்கும், ஏன் உயிருக்கே ஆபத்தாகிப் போனது! அது என்னவென்றால், அந்த ஆண்டில் ஸ்காட்லாந்தின் அரசியாக இருந்த மேரி அரசியல் காரணங்களுக்காக சிறைபிடிக்கப் பட்டிருந்தவள், அதிலிருந்து தப்பி, இங்கிலாந்தின் வடக்கு பகுதியில் அடைக்கலம் தேடினாள். இது, இங்கிலாந்து அரசி எலிசபெத்திற்கு பெரிய தலைவலியாக இருந்தது. ஏனெனில், எலிசபெத்தின் ஒன்றுவிட்ட சகோதரியும், அவளுக்குப்பின் ஆட்சி ஆட்சி அரியணை ஏற உரிமை கொண்ட வாரிசுமாகத் திகழ்ந்த மேரி கத்தோலிக்க கிறீஸ்தவள். அதோடு, பிரான்ஸ் நாட்டோடு நல்ல தொடர்பு வைத்திருந்தாள். எங்கே தமக்கு போட்டியாகி விடுவாளோ என்று அஞ்சிய எலிசபெத் ஸ்காட்லாந்து அரசி மேரியை விசாரிக்க ஒரு விசாரணை மன்றத்தை ஏற்படுத்தி, அதற்கு பிலிப்பின் தந்தை பிரபு தாமஸ் ஹோவார்ட்டை நியமித்தார்.*

*புராட்டஸ்டாண்ட் மதத்தினரும், தமது அன்புக்குரியவருமான தாமஸ் ஹோவார்ட் தமது கடமையை நன்கு செய்வார் என்று எண்ணியிருந்த எலிசபெத்திற்கு ஒரு அதிர்ச்சியான வதந்தி வந்து சேர்ந்தது. அது, 1569-ல் பிரபு தாமஸ் ஹோவார்ட்டின் 3வது மனைவி திடீரென இறந்துவிடவே, அவர் ஸ்காட்லாந்து அரசி மேரியை திருமணம் செய்து தமது அரச பதவிக்கு குறிவைக்கிறார் என்பதே! எதையும் தீர விசாரிக்காது அவசர புத்தியுடைய எலிசபெத் பிரபு தாமஸை லண்டன் டவர் சிறையில் அடைத்தாள். எப்பேர்ப்பட்ட உயர்குல பிரபுவை இப்படி சிறைபிடித்து சிறுமைப்படுத்தியது*

*இங்கிலாந்து அரசியலில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. தமது பேரிலான குற்றச்சாட்டை கடுமையாக மறுத்த தாமஸ் ஹோவார்ட் 8 மாத சிறைக்குப்பின் 1570-ல் விடுவிக்கப்பட்டார்.*

*அதோடு அவரது சோதனை நின்றுவிடவில்லை. 1572-ல் மற்றொரு சோதனை வந்து சேர்ந்து அவருக்கு மரண ஆபத்தைக் கொண்டுவந்தது! அது எப்படியெனில், இங்கிலாந்து அரசி எலிசபெத்தை பதவியிலிருந்து விரட்டி மேரியை அரசியாக்க சதி செய்கிறார். அதற்கு இத்தாலி நாட்டு பெரிய வங்கியாளர்* Roberto Ridolfi-*யின் உதவியோடு, ஸ்பெயின் அரசரின் ஆதரவோடு படையெடுக்க முயற்சி செய்கிறார் என்ற அந்த வதந்தியால் திடுக்கிட்டுப் போனாள் எலிசபெத். தாம் பாப்புவின் வேதத்தை மறுப்பவர், அவளது நலனை விரும்புபவர், குற்றமற்றவர் என்றெல்லாம் தமது நியாயத்தைக் கூறிய தாமஸ் ஹோவார்ட் கைதுசெய்யப்பட்டு 1572 ஜூனில் லண்டன் டவர் ஹில்லில் தூக்கிலிடப்பட்டார். அப்போது நமது அர்ச்சியசிஷ்டவர் பிலிப்பிற்கு வயது 15 !*

## அரசவையில் பிலிப் ஹோவார்ட்!

*தந்தையின் மரணத்தினால் நிலைகுலைந்த பிலிப், தன் ஆசிரியர் ஜார்ஜ் மார்ட்டினின் வழிகாட்டுதலில் தெளிவுபெற்று, தமது இரு சகோதரர்களுடன் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் உயர்கல்வி கற்கச் சென்றார். இரண்டு வருடங்கள் அங்கே* M.A. *பட்டப்படிப்பு படித்தவரின் வாழ்வும் சிந்தனையும் மாறத் துவங்கியது. தந்தையின் மரணத்திற்குப் பிறகு எதிர்பாராது கிடைத்த சுதந்திரமும், அளவில்லாத செல்வமும் அவரை விரைவில் கெட்ட சகவாசத்திற்கு தள்ளியது. துர்மாதிரிகையான வழியில் வாழ ஆரம்பித்தார். அவரது மனைவி அன்னா பெரிதும் வேதனை அடைந்தார்.*

*இதற்கிடையில் 1575-ல் தமது 18வது வயதில் அரசியின் அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். மனதைக் கவரும் அழகும், இளமையும், உயர்ந்த கல்வியும், அளவற்ற செல்வமும் கொண்ட பிலிப்பை அரசிக்குப் பிடித்துப்போனது. அதோடு அரசியல் சூதும், கபடும் நிறைந்த அமைச்சரவை வாழ்வும் அவரைக் கறைப்படுத்தவே, தமது சிருஷ்டிகரை மறந்தார் பிலிப். அரசியை மகிழ்விக்க, உயர்ந்த பதவியைத் தக்கவைக்க எதையும் செய்யத் தீர்மானித்த பிலிப் ஆட்சி மயக்கத்தில் தமது குடும்பத்தை, அன்பு மனைவியை புறக்கணித்தார். வீட்டிற்கு வருவதையும் துண்டித்துக்கொண்டார். தமது குடிப்பிறப்பு, தமது அரச வாரிசுரிமையைச் சுட்டிக் காட்டினாலும், தான் போட்டியாக வந்துவிடுவேன் என்ற சந்தேகம் அரசி எலிசபெத்திற்கு வந்துவிடக் கூடாது என்ற அச்சம் அவரது உள்ளத்தில் எப்போதும் இருந்தது. தமது தந்தையின் மரணம் அவருக்கு பாடங் கற்பித்துக் கொடுத்தது. அதனால் தமது மனைவியை புறக்கணிக்கலானார்.*

*அதோடு லஞ்சம் லாவணியத்திலும் ஈடுபட விலையுயர்ந்த ஆபரணங்கள் பரிசாக வரத் துவங்க ஆடம்பர வாழ்வில் ஆழ்ந்து மயங்கிப் போனார். பின்னாளில் சிறையில் வாடும்போது தமது இந்த செயலுக்காக மனஸ்தாபப்பட்ட பிலிப் தாம் விடுதலை அடைந்ததும், தாம் லஞ்சமாக பெற்ற பரிசு பொருட்களை விற்று ஏழைகளுக்குப் பணத்தைக் கொடுப்பேன் என்று உறுதி எடுத்தார். இதனை பின்னாளில் வேதசாட்சியாகவிருந்த சங். இராபர்ட் சவுத்வெல் சே.ச. சுவாமிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டார். அரசியோடான அவரது தொடர்பு நெருக்கமாகிப் போனது. அவருக்குப் பரிசுகள் வழங்கியும் அவ்வப்போது அரசியையும், அவளது பரிவாரங்களையும் தமது நார்விட்ச் அரண்மனையில் ஆடம்பர விருந்தோம்பல் செய் பிலிப் நாளடைவில் கடனாளியானார். இதற்கு தமது மனைவியின் நிலங்களை விற்கவேண்டியதாயிற்று!*

*அதோடு 1580-ல் பிலிப்பின் வாழ்வு மேலும் புதிய திசை நோக்கி பயணப்படத் துவங்கியது. அவரது செல்வந்த தாத்தா அருண்டேல் எர்ல் பிரபு மரணமடைய அவர் வாரிசு என்ற முறையில் லண்டனிலுள்ள அருண்டேல் கோட்டையில் பிலிப்பு தமது மனைவியுடன் வசிக்கவேண்டியதாயிற்று. 23 வயதே நிரம்பிய பிலிப் இப்போதுதான் தன் மனைவி அன்னாவோடு சேர்ந்தார். அவர்களுக்கு ஆண், பெண் குழந்தைகள் பிறந்தன.*

## மனமாற்றம்!

*அரசவை அரசியலின் ஆடம்பர வாழ்விலும், களியாட்டங்கள், பொழுதுபோக்குகளில் திளைத்த பிலிப், சர்வேசுரன் மட்டிலான தமது வேத கடமைகளை மறந்து வாழ்ந்து வந்தார். கடவுளை நினைக்கப் பயந்தார்! தமது ஆன்மாவைப்பற்றி எந்த அக்கறையும் கொள்ளாது வாழ்ந்த அவரை தேவ பராமரிப்பு கைவிடவில்லை. ஆம், நாம் சென்ற இதழில் துவக்கத்தில் குறிப்பிட்ட 1581-ல் லண்டன் சிறையில் நடைபெற்ற சங். எட்மண்ட் காம்பியனின் வேத தர்க்க உரையாடல் சம்பவம் நிகழ்ந்தது! வேதசாட்சியான எட்மண்ட் காம்பியன் எடுத்துரைத்த வேத சத்தியங்கள், கத்தோலிக்க கோட்பாடுகள் - அதன் நம்பகத்தன்மை, திருச்சபையின் தெய்வீக துவக்கம் போன்றவற்றை கேட்ட பிலிப்பின் மனம் மாறத் துவங்கியது. ஆம்! உல்லாசப்பிரியரும் பதிதருமான பிலிப் ஹோவார்ட் மனம் மாறினார். பின்னாளில் இதுபற்றி அவரே வேதசாட்சியான அர்ச். சவுத்வெல்லுக்கு எழுதிய கடிதத்தில் தாம் கத்தோலிக்க வாழ்வு வாழத் துவங்கு முன்பே கத்தோலிக்கராக முடிவு செய்ததாகவும் குறிப்பிட்டார். கத்தோலிக்க விசுவாசம் அவரில் துளிர்விடத் துவங்கியது. உள்ளம் சஞ்சலமடையவே இப்போது தமது சிருஷ்டிகரை நோக்கி அவரது ஆன்மா எழத்துவங்கியது.*

*ஒருநாள் அருண்டேல் கோட்டையின் விளையாட்டு அரங்கில் தன்னந்தனியே நடந்து சென்றுகொண்டிருந்த பிலிப்பின் ஆன்மா திடீரென தேவ வரப்பிரசாதத்தால் ஆட்கொள்ளப்பட்டது. மோட்சத்தை நோக்கி அபய குரல் எழுப்பி மன்றாடினார். தமது கடந்தகால வாழ்வின் அவலம் உள்ளத்தில் படமாக ஓட, துணுக்குற்று நித்திய வாழ்வை பற்றிய நினைவு அவரில் எழ உடனே மனந்திரும்பினார். சர்வேசுரனின் திருச்சபையின் அங்கத்தினராக அதன்படியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முனைந்தார். தமது மனமாற்றத்தை தமது மனைவியிடமும் கூட வெளிப்படுத்தாமல் உள்ளத்தில் தேவஉதவியை மன்றாடினார்.*

அதன் பிறகு சில நாட்களில் லண்டன் சென்று அங்கே தமது சகோதரர் பிரபு வில்லியம் ஹோவார்ட்டை சந்தித்தார். அவர் மீத தனி அன்புகொண்ட பிலிப் தமது மனமாற்றத்தை வெளிப்படுத்தினார். தமது சகோதரனுக்கு கர்தினால் ஆலன் எழுதிய கத். ஞானநூலை பரிசாக வழங்கினார். அதனை வாசித்த வில்லியம் பின்னாளில் கத்தோலிக்கரானார் என்பது குறிப்பிடத்தக்கது! இப்போதும் பிலிப் மனந்திரும்பிய அருண்டேல் கோட்டையின் காட்சியகத்தை திருயாத்திரைக் காரர்கள் சந்தித்து ஜெபித்து வருகிறார்கள். அங்கே அவரது நினைவுச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளது. ஸ்காட்லாந்தின் அரசி மேரி பயன்படுத்திய ஜெப புத்தகம், அவள் Fotheringay Castle-ல் 1587 பிப்ரவரி 8-ம் நாள் தூக்கிலிடப்படும் போது அவள் அணிந்திருந்த ஜெபமாலை போன்றவை அங்கே வைக்கப்பட்டுள்ளன!

### துவங்கியது துன்பம்!

கத்தோலிக்க விசுவாசத்தால் நிரப்பப்பட்ட சகோதரர்களான பிலிப், வில்லியம் ஹோவார்ட் தங்களது விசுவாசத்தைக் காக்க இங்கிலாந்திலிருந்து வெளியேறி பிரான்ஸ் நாட்டிற்கு சென்றுவிடத் தீர்மானித்தனர். ஆனால் அரசியின் ஒற்றர்களின் கன்னிவலையின் தீவிரத்தை அறியாதிருந்தது துரதிர்ஷ்டமே! எலிசபெத்தின் அரசவை நாட்டை விட்டு வெளி யேறுபவர்கள், நுழைபவர்களை கண்காணிக்க ஒரு ஒற்றர் படையே வைத்திருந்தது. அவர்கள் குறிப்பாக உயர்குலத்தவர்களின் விசுவாசத்திற்காக முனைந்திருப்பவர்கள் கடுமையாக கவனிக்கப்பட்டார்கள். இதற்கிடையில் பெரிய தடை வந்து சேர்ந்தது. எப்படியெனில் 1570-ல் பாப்பரசர் 5-ம் பத்திநாதர் இங்கிலாந்து அரசியை "திருச்சபை விலக்கம்" செய்தார். அதிலிருந்து கத்தோலிக்கர்கள் எவ்வளவுதான் அவளுக்கு விசுவாசம் காட்டினாலும் அவர்கள் தேசத்துரோகியாகவே எண்ணப்பட்டார்கள்.

எர்ல் குடும்பத்தின் காரியதரிசியான ஜாண் மோம் ஃபோர்டு என்பவர் மூலமாக பிலிப் தமது கப்பல் பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்தார். ஆனால் அதற்குள் ஜாண் மோம் ஃபோர்டு Earl of Huntington-ஆல் கைது செய்யப்பட்டார். நாட்டை விட்டு வெளியேற அனைத்து ஏற்பாடுகளையும் இரகசியமாக செய்துகொண்டிருந்த பிலிப்பிற்கு ஒரு சோதனை வந்து சேர்ந்தது. அது என்னவென்றால், அரசி அருண்டேல் அரண்மனைக்கு விஜயம் செய்ய விரும்புவதாக வந்த செய்தியே அது! அதனால் திகைத்துப்போன பிலிப், அரசியை ஆடம்பரமாக வரவேற்று உபசரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். அரசியை வரவேற்று உபசரிப்பதில் மனம் மகிழ்வதாகக் கூறி, நன்றி கூறிய அரசி எலிசபெத் பிலிப்பின் நடத்தையில் மாற்றத்தைக் கண்டாள். அவர் முன்பு போல் விருந்து நடன களியாட்டங்களில் ஈடுபாடாக இல்லையே என்பதை உணர்ந்து சந்தேகமடைந்தாள். எனவே பிலிப்பை விசாரிக்கும்படியாகவும், அவர் தமது வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்றும் கட்டளைப் பிறப்பித்துச் சென்றாள். ஆம்! பிரபு பிலிப் ஹோவார்ட் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்! (தொடரும்)

***6-ம் பக்கத் தொடர்ச்சி ...***

முதல் இரண்டு நிபந்தனைகளும் தேவதாயாரின் உதவியோடு நிவர்த்திசெய்யப்பட்ட நிலையில் - அடுத்த கட்ட நடவடிக்கையான வேத சத்தியங்கள் குறித்தான உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ்வுரையாடல்கள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்ல இயலாது. ஆனால் அவைகள் நடக்கவேண்டுமென்ற அவசியம் நம்மால் ஏற்கப்பட்டிருக்கிறது.

வேத சத்தியங்கள் குறித்தான பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் நம்மால் எதுவும் செய்ய இயலாது. ஒருவேளை இப்பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே ஒருவித ஏற்பாடு - அமைப்பு நம்மேல் சுமத்தப்படுமானால், அத்தகைய நிலை முந்திய நிலையைவிட மோசமானதாயிருக்கும். ஒரு வண்டியை இரு மாடுகள் வெவ்வேறு பக்கம் இழுத்தால் வண்டி எங்கும் நகராது. அதுபோல திருச்சபையிலே பாரம்பரியமும் நவீனமும் ஒருசேர செயலாற்ற முடியாது.

எனவேதான், இத்தகைய உரையாடல்கள், தெளிவுகள் திருச்சபையின் எதிர்காலத்திற்கு மிக அவசியம். இதனை வெற்றியுடன் நடத்திடுமாறு தேவதாயை மன்றாடுவோம். அவர்களது மாசற்ற இருதயம் வெற்றிபெற, நமது வந். ஃபெல்லே ஆண்டகை மீண்டும் அறிவித்து துவக்கியுள்ள ஜெபமாலைப் போரை வீர விசுவாசத்துடனும் பக்தியுடனும் ஜெபிப்போம். அதனால் மரியாயின் மாசற்ற இருதய வெற்றிக்கான நிபந்தனைகளான: முதல் சனி பரிகாரப்பக்தி பரவுதல் மற்றும் பாப்பரசரின் ரஷ்ய ஐக்கிய அர்ப்பணம் விரைவில் நிறைவேறி திருச்சபையில் நவீனம் மறைந்து பாரம்பரிய சத்தியங்கள் துலங்கி சர்வேசுரன் மகிமையடைவாராக!

# வாசகர்களே ஜெபமாலைப் போருக்கான அழைப்பை மறவாதீர்கள்!

**உருக்கமுடன் ஜெபமாலைகளை ஜெபித்து மரியாயின் மாசற்ற இருதய வெற்றியைக் கொண்டு வாருங்கள். அதற்கான நிபந்தனைகளான: 1. ரஷ்ய ஐக்கிய அர்ப்பணம், 2. துயரம் நிறைந்த மாசற்ற இருதய பரிகாரப் பக்தி கைகொள்ளப்படல் ஆகியவை நிறைவேற மன்றாடுங்கள்.**

# தேவ அன்னைக்கு ஓர் புகழ்மாலை!

(தேவமாதாவின் புகழ்பாடும் மாதா பிரார்த்தனையின் விளக்கம் இங்கே விவரிக்கப்படுகிறது)

## (17) விசுவாசியாயிருக்கிற கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

"விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம்" ஆகிய மூன்று புண்ணியங்களையும் தேவ சம்பந்தமான புண்ணியங்கள் (Theological Virtues) என்று அழைக்கின்றோம். ஏனெனில் இவை நம்மை சர்வேசுரனோடு, அவரைப் பற்றிய காரியங்களில் இணைக்கின்றன. எப்படியெனில், விசுவாசம் என்ற புண்ணியத்தால் கண்ணால் காணாததும், காதால் கேளாததும், புத்தியால் கண்டுபிடிக்க முடியாத சர்வேசுரனைப் பற்றிய பரம இரகசியங்கள் நித்திய உண்மைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்கிறோம். ஏவுதலும், ஒத்தாசையும் கொடுக்கிற தேவ வரப்பிரசாதத்தைக் கொண்டு, சர்வேசுரன் அறிவித்ததினிமித்தம் அவற்றை சகல சத்தியங்களை அங்கீகரித்து முழு மனதுடன் ஏற்றுக்கொள்வதே தேவ விசுவாசமாகும்.



இதுவே நமது இரட்சண்யத்திற்கு ஆரம்பமும், அடிப்படையாகவும் இருக்கிறது. விசுவாசம் இல்லையேல் நமது ஞான ஜீவியம் அழிந்துவிடும். நமது தேவ அன்னையிடம் இந்தப் புண்ணியம் சிறந்து விளங்கியது. அர்ச். இரெணியூஸ் என்பவர் "நமது ஆதித்தாயாகிய ஏவாளின் அவிசுவாசத்தினால் ஏற்பட்ட பெரும் தோஷம் மரியாயின் விசுவாசத்தால் நிவர்த்திக்கப்பட்டது; ஏவாள் சர்வேசுரனுடைய கட்டளையைப் புறக்கணித்து, பசாசின் வார்த்தைகளுக்குச் செவி சாய்த்து சாவை இவ்வுலகிற்கு கொண்டுவந்தாள். ஆனால் நமது மோட்ச இராக்கினியோ வெனில், தேவதூதன் தனக்கு அறிவித்த மனிதாவதாரத்தின் பரம இரகசியம் தன்னிடம் நிறைவேறும் என்று உறுதியாய் விசுவசித்தாள். இதோ தேவ குமாரன் நமது இரட்சண் யத்தின் பொருட்டு, மரியாயிடம் மனிதனாக அவதரிக்கிறார். மரியாயின் விசுவாசம் மோட்சத்தின் கதவுகளை நமக்குத் திறந்து வைக்கிறது" என்று கூறுகிறார்.

### விசுவாச வாழ்வு!


தேவ அன்னையின் ஜீவியத்தை சற்று நோக்கினால், அவர்களிடம் விளங்கிய ஆழ்ந்த விசுவாசம் நமக்கும் புலனாகும். கபிரியேல் தூதர் சொன்னவற்றை மெய்யென நம்பி, தேவ குமாரனை உற்பவித்து, பெற்றெடுத்தார்கள். அவரே உலக சிருஷ்டிகர் - உலகை மீட்கும் இரட்சகர் என்பதை விசுவசித்து, அவரை போஷித்து, பாதுகாத்து வளர்த்து வந்தார்கள். கொடிய பாடுகளிலும் சேசுவை விசுவசித்து, அவரோடிருந்து, தானும் பாடுகளை அனுபவித்து இரட்சண்ய அலுவலை நிறைவேற்றினார்கள். "நீதிமான் விசுவாசத்தில் ஜீவிக்கிறான்" என்ற வேத வாக்கியம் மாதாவிடம் உத்தம விதமாய் நிறைவேறியதைக் காணலாம்.

நமது ஜீவியமும் விசுவாசத்தால் நடத்தப்படுதல் அவசியமே. நமதாண்டவரால் ஏற்படுத்தப்பட்ட தவறா வரம் பெற்ற திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கும் சத்தியங்கள் யாவற்றையும் ஏற்று, அவற்றின்படி நாம் நடந்தால் நம்மிடம் உண்மையான விசுவாசம் உண்டென்பதற்கு அதுவே அடையாளமாகும். நமது விசுவாசத்தை நற்கிரியைகளிலும், நன்னடத்தையிலும் காட்டவேண்டும். இதனைப்பற்றியே அர்ச். இயாகப்பர், "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகளினால் அதைக் காட்டாவிடில், அவனுக்கு பிரயோஜனம் என்ன?... விசுவாசம் கிரியைகளைக் கொண்டிராவிடில், தன்னிலே செத்த விசுவாசமாயிருக்கிறது" (இயாக. 2:14-17) என்று போதிக்கிறார். எனவே நமது விசுவாசத்தை நமது பரிசுத்தமான வாழ்வாலும், ஆழ்ந்த பிறர் சிநேகத்தாலும் வெளிப்படுத்தி பிறருக்கு நன்மாதிரிகைக் காட்டுவோமாக.

இதற்காக தாய் திருச்சபையும் நமது விசுவாச வாழ்வுக்கு நமக்கு மேல்வரிச் சட்டமாக தேவதாயைத் தருகிறது. அதோடு பதிதர்களாலும், உலக ஆதாய கடவுள் மறுப்பு கொள்கைகளாலும், நவீனத்தாலும் பீடிக்கப்பட்ட இவ்வுலகில் நமக்கு தஞ்சமாக விசுவாசம் நிறைந்த கன்னிமாமரியை தந்து, அவர்களிடம் நம்மைக் காக்கும்படி மன்றாடி -

**"விசுவாசியாயிருக்கிற கன்னிகையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்"**

என்று பிரார்த்திக்கும்படி தாய் திருச்சபை நம்மைப் பணிக்கிறது.




# அர்ச். கிளாரம்மாள் சரிதை




**15.** கிளாராவின் தங்கை ஆக்னஸும் அவளோடு மடத்திலேயே தங்கி விட்டாள். அதனால் அவளது குடும்பத்தினர் கோபமடைந்தார்கள். ஆக்னஸை எப்படியாவது மடத்திலிருந்து வீட்டுக்கு அழைத்து வந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தனர்.




**16.** அதன்படி, மடத்திற்கு வந்து ஆக்னஸை பலவந்தமாக வெளியே தூக்கி வந்தனர். எதிர்ப்பு தெரிவித்த ஆக்னஸ் தரையில் விழுந்தாள். தன்னைக் காப்பாற்றும்படி சேசுவிடம் மன்றாடிய அவளை, தூக்க முயன்ற உறவினர்களால் அசைக்கக்கூட முடியாது போயிற்று !




**17.** உறவினர்கள் ஏமாற்றத்தோடு திரும்பினர். கீழே கிடந்த ஆக்னஸை ஆறுதல் கூறி கிளாரா தன்னோடு சேர்த்துக்கொண்டாள். அவளுக்கு துறவற ஆடை வழங்கும்படி பிரான்சிஸை கிளாரா கேட்டுக்கொண்டாள்.




**18.** அவர்களை ஆசீர்வதித்த பிரான்சிஸ், அநேக பெண்கள் அவளோடு சேர்ந்துகொள்வார்கள் என்றும், கிளாரா அவர்களை வழிநடத்துவாள் என்று முன்னுரைத்தார். கிளாராவோ, ''சகோதரிகளுக்கு ஊழியக்காரியாக இருந்து வழிநடத்துவேன்'' என்றாள்.




**19.** சகோதரிகளின் பாதுகாப்பைக் கருதிய பிரான்சிஸ் அர்ச். தமியான் ஆலய வளாகத்தில் அவர்களைத் தங்க வைத்தார். அங்கே தனிமையில் ஆண்டவரின் அன்பிலும், தரித்திரத்திலும் சகோதரிகள் வாழ்ந்து வந்தார்கள்.




**20.** அவர்களது தூய வாழ்வைக் கண்ட கிளாராவின் சிநேகிதி போனாவும் சிலநாட்களில் அவர்களோடு மடத்தில் சேர்ந்து கொண்டாள். அவளை ஏற்றுக்கொண்ட கிளாரா ''படுக்க கொஞ்சம் வைக்கோல் தவிர என்னிடம் எதுவுமில்லை; நமக்கான உணவை தேவபராமரிப்பு தரும்'' என்று கூறினாள். சகோதரிகள் தரித்திர வாழ்வில் மகிழ்வோடு ஈடுபட்டனர்.




**21.** கிளாராவோடு போனாவும் சேர்ந்ததாள் அந்நகரிலுள்ள அநேக இளம் பெண்கள் ஆச்சரியமடைந்தனர். தாங்களும் அவர்களைப் போல சேசுவுக்காக தரித்திர வாழ்வு வாழவேண்டும் என்று விரும்பினர். தங்களையும் கன்னியராக சேர்க்க வேண்டு மென்று கிளாராவிடம் வேண்டிக்கொண்டனர். இதனால் சகோதரி களின எண்ணிக்கை அதிகரித்தது.




**22.** பிரான்சிஸின் துறவிகள் தங்களுக்கு தேவையானவைகளை தினமும் பட்டணத்திற்கு சென்று பிச்சையெடுத்து உண்டு வாழ்ந்து வந்தனர். தங்களது உணவில் சிறிதளவு கிளாரா சகோதரிகளுக்கும் கொடுக்கும்படி பிரான்சிஸ் ஏற்பாடு செய்தார். இதனால் சகோதரிகளுக்கு தேவையான உணவு கிடைத்தது. அவர்கள் நன்றியோடு சர்வேசுரனை தோத்தரித்து வணங்கி வந்தனர்.


**23.** ''சகோதரிகளுக்கு ஊழியக்காரியாக இருப்பேன்'' என்று வாக்குறுதி கொடுத்த கிளாரா தங்களுக்கு கிடைக்கும் உணவை சகோதரிகளுக்கு பங்கிட்டுக் கொடுத்துவிட்டு எஞ்சிய உணவை தான் உண்டு வந்தாள். சேசுவுக்காக தனது மடத்து சகோதரிகளை நேசித்து அவர்களுக்கு ஒரு பணிவிடைக்காரியாக இருந்து வந்தாள். அங்கே சேசுவின் அன்பு அவர்களை இணைத்து பராமரித்து காத்து வந்தது. *(தொடரும்)*



# தேவ ஆராதனை முறைமை

## திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்கு பின்வரும் காலம்

இக்காலம் பரிசுத்த தமதிரித்துவத்தின் திருநாளிலிருந்து துவக்குகின்றது. தேவ ஆராதனைமுறை வருஷத்தில் அதிக நீண்ட காலம் இதுவே. சில சமயங்களில் ஆறு மாதங்களுக்கு அதிகமாயும், இருபத்துநான்கு முதல் இருபத்தெட்டு வாரங்கள் வரையிலுங் கூட நீடித்திருக்கும்.



இதற்கும், மற்ற ஆராதனை முறை காலத்திற்கும் வேற்றுமை யுண்டு. ஆராதனைமுறையில் ஆகமன காலத்திலிருந்து கிறீஸ்துவின் பர இரகசியங்களைச் சார்ந்த சரித்திர சம்பவங்களின் கொண்டாட்டங்கள் அதாவது மெசியாவின் வருகைக்கு எதிர் பார்ப்பது, அவருடைய பிறப்பு, குழந்தைப் பருவம், வெளியரங்க சீவியத்தின் பல்வேறு நடபடிகள், பாடுகள், மரணம், உத்தானம், பரலோகஞ் சென்றது, திவ்விய இஸ்பிரீத்துசாந்துவை அனுப்பியது இவையனைத்தும் ஒரு கோர்வையாக இருக்கின்றன; இவை பாஸ்குக் காலத்துடன் ஒரு முடிவாகின்றன.

ஆனால், திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளுக்கும் தேவ ஆராதனைமுறை வருடம் துவக்கும் நாளுக்கும் இடையே வரும் காலத்தில் அவ்வித நிகழ்ச்சிகள் ஒன்றுமில்லை. இக்காலத்தில் தோன்றும் ஞாயிறு வாரங்களுக்குள்ளும் நெருங்கிய சம்பந்தமில்லை. மேலும், பலிப்பூசையின் போதனை பாகங்களும், செபங்களும் திட்டமான ஒரு நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. செபங்கள் மட்டும் - சபைச்செபம், அமைதி மன்றாட்டு, உட்கொண்டபின் செபம் - வரப்பிரசாத சீவியத்தைப்பற்றிப் பேசுகின்றன.

ஆயினும், **ஞான சீவியத்தைச் சார்ந்தமட்டில்** இக்காலம் மிக முக்கியமானது. **இது வரப்பிரசாத ஆட்சியின் காலமென்று** சொல்லப்படும். ஆண்டவர் உயிர்த்தெழுந்த நாளில் ஸ்தாபிக்கப்பட்டதும், பெந்தெகோஸ்து நாளில் பூர்த்தியாக்கப்பட்டதுமாகிய இந்த வரப்பிரசாதத்தின் ஆட்சி திருச்சபையிலும், மனிதருடைய இருதயங்களிலும் ஆழ்ந்த வேர்கொண்டு செழிப்புறும் காலம் இதுவே. எப்படியெனில், கிறீஸ்துநாதர் துவக்கிவிட்டுப் போயிருக்கும் இரட்சண்ய வேலையைத் தொடர்ந்து நடத்தும் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் இப்போதும் உலகத்தில் வாசஞ் செய்துகொண்டு வருவதும், மனிதருடைய இதயங்களில் **தமது அர்ச்சிப்பு** வேலையை நடத்திவருவதும் இக்காலத்தில் கொண்டாடப் படுகின்றன.

### திருச்சபையின் சரித்திரம்

பரம பிதா தம் மக்கள்மீது அரசு செலுத்திவந்ததைத் தேவ ஆராதனைமுறை ஆகமன காலத்தின் வழியாக நமக்கு ஞாபகப்படுத்திற்று. பின்பு, சுதன் தமது இவ்வுலக சீவியத்தின் பரம இரகசியங்களால் நம்மை ஆட்கொண்டதை அவர் பிறப்பின் காலம், பாஸ்கு காலம் இவற்றின் வழியாக நமக்கு அறிவுறுத்திற்று. அவ்விதமே, இப்பொழுது திவ்விய இஸ்பிரீத்துசாந்து திருச்சபையில் **உலக முடியுமட்டும் ஞான ஆட்சி செய்துவருவதை** இக்காலத்தின் வழியாகக் குறிக்கின்றது.

மற்றத் திருநாட்களின்பொழுது ஒரு பரம இரகசியம் நிறைவேறியதை ஆராதனைமுறை நமக்கு ஞாபகப்படுத்தும். ஆனால் இஸ்பிரீத்துசாந்து திருநாளின் பரம இரகசியம் அத்தகையதன்று ஒருநாளில் முடிந்துபோகும் சம்பவமல்ல. இப்பரம இரகசியம் திருச்சபையில் **இன்னும் பூர்த்தியாகிக்கொண்டே வரும் ஓர் நீண்ட சம்பவம்.** அதாவது அப்போஸ்தலர்களின்மீது இறங்கியருளிய அதே இஸ்பிரீத்துசாந்து இப்பொழுதும் மெய்யாகவே திருச்சபையில் இறங்கி வருகிறார்; முன்னாளில் ஆச்சரியத்துக்குரியவிதமாகத் தோன்றியதுபோலல்ல; ஆனால் அதே அர்ச்சிப்பு வேலையோடும், அதே பலன்களோடும் வருகிறார்.

திவ்விய இஸ்பிரீத்துசாந்து கிறீஸ்துவின் ஞான சரீரமாகிய திருச்சபையின் ஆத்துமம். ஆத்துமம் சரீரத்திற்கும், அதன் அங்கங்களுக்கும் உயிரளித்து வருவதே போல், இவர் திருச்சபைக்கும் அதன் அங்கங்களாகிய ஆத்துமங்களுக்கும் திவ்விய பலிபூசை, தேவதிரவிய அநுமானங்கள், குருத்துவம், கிறீஸ்துவின் போதனைகள் இவைகளைக்கொண்டு கிறீஸ்துவின் பேறுபலன்களையும், தம்முடைய ஏழு கொடைகளையும் அளித்து, சர்வேசுரனுடைய இராச்சியத்தை இவ்வுலகில் அர்ச்சித்துக்கொண்டுவருகிறார்.

“உங்களுக்குச் சொல்ல இன்னும் அநேக காரியங்கள் உண்டு; ஆனால் இப்பொழுது அவைகளைத் தாங்க உங்களால் கூடாது. ஆனால், சத்தியத்தின் இஸ்பிரீத்துசாந்து வந்திருக்கும்போது, எல்லா சத்தியங்களையும் உங்களுக்குப் போதிப்பார்” (அரு. 16:12-13) என்ற கிறீஸ்துவின் வாக்கு இவ்விதம் திருச்சபையில் நிறைவேறிக்கொண்டே வருகின்றது.

### இக்காலத்தின் ஆராதனைமுறை

பாஸ்கு காலத்தின் எதிரொலியைப்போன்றிருக்கும் இக்காலத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமைகள் வரப்பிரசாத ஜீவியத்தை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. ஞாயிறு பலிபூசைகள் பொதுவாக பாஸ்காவின் பரம இரகசியங்களின் பேறுபலன்களாகிய அந்த வரப்பிரசாதத்தைக் குறித்தே பேசுகின்றன. ஆதலால் முதல் கிறீஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிறையும் ஒரு சிறு பாஸ்கு திருநாளாக மதித்துவந்தனர்.

பலிபூசையின் பாகங்களில் அடங்கியுள்ள **யோசனைகள்:** முதல் தோற்றத்தில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படா திருப்பது போல் தோன்றும். தற்காலப் பூசைப்புத்தகம் மத்திய நூற்றாண்டுகளில் தொகுக்கப்பட்டபொழுது, சில பூசைகள் அல்லது அவற்றின் பாகங்கள் இடம் மாறிப்போய் விட்டதாகத் தெரிகிறது. இருப்பினும் இந்த 24 பூசைகளில் புதைந்து கிடக்கும் யோசனைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்:-

*(1) 1-6* பூசைகளில் கிறீஸ்துநாதர் தாம் செய்கிற அற்புதங்கள் மூலம் தமது போதனையை உலகிற்கு அறிவிக்கின்றார்; ஆத்துமத்தின் மாசுகளைப் போக்கும் இரட்சகராகத் தோன்றுகின்றார்;

*(2) 7-14* பூசைகள் கிறீஸ்துவினுடையவும் சாத்தானுடையவும் இராச்சியங்களுக்குள்ள வேற்றுமைகளைச் சீர்தூக்கி காண்பித்து, ஆண்டவருடைய இராச்சியத்தையே தேடும்படி கற்பிக்கின்றன;

*(3) 15-24* பூசைகள் ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கு மனுக்குலத்தை ஆயத்தப்படுத்துகின்றன.

இக்காலத்தில் உபயோகிக்கும் பச்சை நிறம் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவினால் நடத்தப்படும் திருச்சபையானது விசுவாசிகளுக்குக் கொடுக்கும் **நம்பிக்கைக்கு** அடையாளம்; மனுக்குலம் கிறீஸ்துவின் வருகைக்காகத் திரும்பவும் காத்துக்கொண்டிருப்பதைக் குறிக்கும்.

சில பெரிய திருநாட்கள் இக்காலத்தில் கொண்டாடப்படுகின்றன. கிறீஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையாகிய பரி. தமதிரித்துவத்தின் திருநாள். பின், மனித அவதாரத்தின் அன்பின் அடையாளங்கள்: தேவநற்கருணை, சேசுவின் திருஇருதயம், திருச்சிலுவை, மறுரூபம் முதலிய வற்றைக் கொண்டாடும் திருநாட்கள்.

அர்ச்சியசிஷ்டவர்களின் காலச் சக்கரத்தின் திருநாட்களில் முக்கியமானவை: அர்ச். கன்னிமரியாயைக் குறித்துப் பலமுறை ஞாபகம்; அர்ச். சூசையப்பர், அர்ச். ஸ்நாபக அருளப்பர், அர்ச். இராயப்பர், சின்னப்பர், சுவிசேஷகர்கள், அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசானவர்; சகல அர்ச்சியசிஷ்டவர்களுடையவும், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமங்களுடையவும் ஞாபகம்.

கடைசியாக, இவைகளுக்கெல்லாம் சிகரம் போல் விளங்கும் கிறீஸ்து இராஜாவின் திருநாள்.

### கிறீஸ்துவினுடைய ஜீவியம்

கிறீஸ்தவன் பாஸ்குத் திருநாளின்போது ஞானஸ்நானத்தினால் அல்லது ஞானஸ்நான வரப்பிரசாதத்தைப் புதுப்பித்துக்கொண்டதினால், பெற்றுக்கொண்ட ஞான ஜீவியத்தை இஸ்பிரீத்துசாந்துவின் தூண்டுதலால் இக்காலத்தில் பலப்படுத்திக்கொண்டும், பரிசுத்த தேவநற்கருணையால் போஷித்துக்கொண்டும் கிறீஸ்துவைக் கண்டுபாவித்து அவருடைய ஞான அளவை அடைய நாள்தோறும் முயன்று வருகிறான்.

இஸ்பிரீத்துசாந்துவானவர் தமது அர்ச்சிப்பு வேலையால் கிறீஸ்தவனுடைய தீர்மானங்களை உறுதிப்படுத்தி, அவன் சாத்தானுக்கு விரோதமாய்ச் செய்யும் ஞானப் போரில் பக்கபலமாயிருந்து, பரிசுத்ததனத்திலும் தேவ சிநேகத்திலும் அவன் வளரும்படிச் செய்து, கிறீஸ்துவின் வரவை எதிர்நோக்கிக்கொண்டிருக்க உதவிசெய்கிறார். அவன் இவ்வுலகில் செய்துகொண்டிருக்கும் இவ்வித நீண்ட திருயாத்திரையைத்தான் இக்காலம் குறிப்பிடுகின்றது.


ஆகமனகாலமும் தபசுகாலமும் ஆத்துமத்தின் **சுத்திகர** காலம் (Purgative way); கர்த்தர் பிறப்புக்காலமும் பாஸ்கு காலமும் ஆத்துமம் **ஞான ஒளி** அடையும் காலம் (Illuminative way); இஸ்பிரீத்துசாந்துவின் காலம் ஆத்துமம் **தெய்வீகத் தோடு ஐக்கியமாகும்** காலமாம் (Unitive way).

## *Sentire Cum Ecclesia !*

***நாம் நமது சொந்த தீர்மானங்களை விலக்கி, எப்பொழுதும் நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதரின் பத்தினியாம், தாயாகிய திருச்சபையின் அதிகாரப் பீடத்தை தாமதியாமல் ஏற்று கீழ்ப்படிய மனதாயிருக்க வேண்டும்.***

**– அர்ச் இஞ்ஞாசியாரின் திருச்சபையினுடைய சிந்தனையைக் கொண்டிருப்பதற்கான முதல் விதிமுறை.**

# திரிதெந்தீன் திவ்விய பலிபூசையை



## அறிந்து கொள்வோம்!

**[கத்தோலிக்கத் திருச்சபையின் பொக்கிஷமான திரிதெந்தீன் திவ்விய பலிபூசை ஒருபோதும் தடைசெய்யப்படவில்லை. அது திருச்சபையில் நித்தியமாக நிறுவப்பட்டுள்ள மெய்யான கல்வாரி பலியாகும். இப்பூசையில் சிறந்த முறையில் பங்கேற்பது நமது விசுவாச வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கும். அதற்கு பூசையின் ஒவ்வொரு பகுதியையும், அதன் முக்கியத்துவத்தையும் விசுவாசிகள் அறிந்து கொள்வது அவசியம். அதற்கு இத்தொடர் உதவும். – ஆசிரியர்]**

### முதல் பாகம்

**இரண்டாம் பிரிவு (உபதேசப் பாகம்)**

### ௮. ஆசீர் கேட்டல்

(அப்போஸ்தலர்களின் போதனையை தியானித்து – சேசுவின் போதனைக்கு தயாரித்தல்)

**சுவிசேஷத்தின் உந்நதம்!**

திவ்விய பலிபூசையின் முதல் பாகத்தில் மிகவும் முக்கியமான இடத்தை சுவிசேஷ-வாசகம் வகிக்கிறது. இங்கே வழிபாட்டிற்கென சுவிசேஷத்திலிருந்து ஒரு பகுதியோ அல்லது சிறு பாகமோ தேர்ந்தெடுத்து வாசிக்கப்படுகிறது. சுவிசேஷம் (Evangelium) என்பது செய்தி அல்லது மகிழ்ச்சியை தரும் சுபச்செய்தி என்று பொருள்படும். சேசுக்கிறீஸ்துவின் வழியாக சர்வேசுரனால் வெளிப்படுத்தப்பட்டவை அனைத்தும் நற்செய்திகளாக இருக்கின்றன. அது மீட்பரின் மீட்புச் செய்தியாக இலங்குகிறது. இந்த மீட்பின் - சமாதானத்தின் மகிழ்ச்சியான செய்தி முதன்முதலில் பெத்லேகமில் இரவில் இடையர்களுக்கு சம்மனசுகள் வாயிலாக அறிவிக்கப்பட்டது: "இதோ, எல்லா ஜனத்துக்கும் மகா சந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்..." (லூக். 2:10). அதுபோல சேசுநாதரும்: "ஆண்டவருடைய இஸ்பிரீத்துவானவர் என்மேலிருக்கிறார். ஆதலால் அவர் என்னை அபிஷேகம் பண்ணி தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும்... என்னை அனுப்பினார்..." (லூக். 4:18-19) என்று உரைத்து சுவிசேஷத்தின் தன்மையை விளக்குகிறார். ஆக, மீட்பின் செய்தியே நற்செய்தி என்று அழைக்கப்படுகிறது. பாவத்தினின்றும், சாத்தானின் பிடியிலிருந்தும் மனுக்குலத்தை விடுவிக்கவும்; துன்பக் கடலின் ஆழத்திலிருந்து மீட்கவும், இருளிலிருந்தும் முடிவில்லா கொடிய வேதனையிலிருந்து தப்பு விக்கவும் சர்வேசுரன் தரும் செய்தியாக சுவிசேஷம் திகழ்கிறது.

பரிசுத்த சுவிசேஷத்தின் வாசகங்கள் உண்மையிலேயே நித்திய ஞானமானவரும், சிருஷ்டிக்கப்படாத வார்த்தையானவரின் சொற்களாக இருக்கின்றன. பூசையில் சுவிசேஷத்திலிருந்து வாசகங்கள் வாசிப்பதானது, வெறும் போதனையாகவோ, படிப்பினையாக வோ அல்லாமல் அது வழிபாட்டு கிரியையாகவும் திகழ்கின்றது! திருச்சபையானது திவ்விய நற்கருணை, இஸ்பிரீத்துசாந்துவானவரின் வரப்பிரசாதங்களுக்கு அடுத்தபடியாக சுவிசேஷ வாக்கியங்களுக்கு அதிக சங்கை மரியாதையை செலுத்துகிறது. சுவிசேஷ வார்த்தைகள் தெய்வீக கைங்கரியமாக இருக்கிறது. பீடத்தில் ஒளி அலங்காரங்கள் மற்றும் தூபவர்க்கங்களின் நறுமணத்திற்கு மத்தியில் ஆடம்பரமாக பக்தியோடு சுவிசேஷ வாக்கியங்கள் வாசிக்கப்படும் போது அது தெய்வீக வழிபாடாக - சங்கையாக சர்வேசுரனுக்குச் செலுத்தப்படுகிறது!

**சுவிசேஷ அறிவிப்புக்கான தயாரிப்பு!**

எனவே தான் சுவிசேஷம் வாசிக்கப்படுவதற்கு மிகவும் உந்நத தயாரிப்பு அவசியமாகிறது. 4-ம் நூற்றாண்டிலிருந்து பூசையில் சுவிசேஷம் வாசிப்பது தியாக்கோனுக்கு அல்லது குருவுக்கே கடமையாக இருந்தது. ஆனால், சேசுக்கிறீஸ்து நாதரின் போதனையை அறிவிப்பதற்கு அவர்கள் தகுதியாக்கிக்கொள்வதற்கு தங்களையே தயாரித்துக்கொள்ள வேண்டும். ஆண்டவருடைய பரலோக உண்மைகளை அறிவிப்பதற்கு அவர்களது இருதயமும், வாயும் தகுதியானவையாக இருக்கவேண்டும். அதற்காக உத்தமமாய் தூய்மைப்படுத்துவதிலும், தங்கள் வாயை அர்ச்சித்துக்கொள்வதே சிறந்த தயாரிப்பாக இருக்க முடியும். உண்மையிலேயே ஆன்மாவானது அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருந்தாலும், உலக சார்பான சுயநல நோக்கங்கள் போன்ற குறைபாடுகளிலிருந்தும்கூட விடுபட மோட்சத்திலிருந்து பெறும் ஆசீர்களால் அர்ச்சிக்கப்படவேண்டுவது மகா அவசியம்.

இந்த காரணங்களுக்காக இரண்டு ஜெபங்கள் குருவால் சொல்லப்படுகிறது. ஒன்று: தம்மை தூய்மைப் படுத்துவதற்காக, மற்றொன்று தேவ ஆசீர்வாதத்தால் அர்ச்சிக்கும்படியாக அவை குருவால் ஜெபிக்கப்படுகின்றன.



சங்கீதப் பாடல்களுக்குப் பின் குருவானவர் பீடத்தின் நடுவில் சென்று தாழ தலை குனிந்து வணங்கி இந்த இரண்டு செபத்தையும் சொல்லுகிறார். பரிசாரகன் பூசைப் புத்தகத்தை பீடத்தின் வலதுப் பக்கத்திற்கு மாற்றுகிறான்.

குருவானவர் தமது கண்களை மேலே, உதவியும் சகாயமும் வரும் பர்வதமான மோட்சத்தை நோக்கி உயர்த்துகிறார். பின்னர் அவர் தமது கண்களை மீண்டும் தாழ்த்தி பக்தியோடு குனிந்து கரங்களை சேர்த்து பீடத்தில் அவைகளை வைக்காது செபிக்கிறார். தேவ ஏவுதல் பெற்ற வேதாகம சத்தியங்களை போதிக்க ஆண்டவர் இசையாஸ் தீர்க்கதரிசிக்கு தைரியம் வழங்கியது போல் ஆண்டவர் தன்னையும் அருகதையுள்ளவராக்க வேண்டுமென்று குரு ஜெபிக்கிறார்.

"இசையாஸ் தீர்க்கதரிசியின் உதடுகளை எரிகிற அக்கினித் தழலைக் கொண்டு தூய்மைப்படுத்தியருளிய சர்வ வல்லபரான சர்வேசுரா, தேவரீர் என்னுடைய இருதயத்தையும் உதடுகளையும் சுத்திகரித்து, உமது பரிசுத்த சுவிசேஷத்தைத் தகுந்த வண்ணம் போதிக்க நான் அருகனாகும்படி என்னை உமது தயவுள்ள இரக்கத்தினால் பரிசுத்தப்படுத்த கிருபை கூர்ந்தருளும். ஆமென்."



இந்த முதல் மன்றாட்டை குருவானவர் தமது உள்ளரங்க தூய்மைக்காக மன்றாடுகிறார். திருச்சபையின் தந்தையர்கள் ஆன்மா திவ்விய நற்கருணையை உட்கொள்வதற்கு தேவையான எத்தகைய தூய்மையை பெற்றிருக்கவேண்டுமோ, அதற்கு ஒத்த தூய்மையையும் சர்வேசுரனுடைய சத்தியத்தையும் வார்த்தையையும் பெற்றுக்கொள்ளும்போது கொண்டிருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். ஏனெனில் "...கெட்ட எண்ணமுள்ள ஆத்துமத்தில் ஞானமானது பிரவேசியாது..." (ஞானா. 1:4).

மனித இதயமானது (ஆத்துமம்) பாவத்தினால் மட்டும் காயப்படுத்தப்படுவதில்லை. அதனுடைய ஆன்ம அழகானது உலக ஆசை, சோதனைகள், இடையறாத உலக ஆசாபாசங்கள், நாட்டங்களாலும் தீட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் தான் குருவானவர் முதல் ஜெபத்தை ஜெபித்தபின், தன்னை அர்ச்சிக்கும்படியாக தாழ்ச்சி சிரவணத்தோடே ஆண்டவரை நோக்கி விண்ணப்பிக்கிறார்.

"Jube, Domine, benedicere,

Dominus sit in corde meo, et in labiis meis, ut digne et competenter annuntiem Evangelium suum. Amen."

"ஆண்டவரே, என்னை ஆசீர்வதித்தருள்வீராக.

ஆண்டவருடைய சுவிசேஷத்தை நான் தக்கவிதமாயும், தகுந்த மேரையோடும் வெளிப்படுத்த அவர் என் இருதயத்திலும் உதடுகளிலும் இருந்தருள்வாராக. ஆமென்."

சர்வேசுரனுடைய சுவிசேஷத்தைப் போதிக்க உள்ளரங்க மனிதனின் தூய்மை முதன்மையாகத் தேவைப்படுகிறது. ஆனால் அதுமட்டும் போதாது. தேவ வார்த்தைகளை உச்சரிக்கும் உதடுகளும்கூட தூய்மையாக பரிசுத்தமாக இருக்கவேண்டும். "தேசிகனது உதடுகள் நூலைக் காத்து வருவன; அவன் நாவினின்று வேத சட்ட (அறிவைத்) தேடிக்கொள்வார்கள்" (மலாக்கி. 2:7). குருவானவரின் வாய் மோட்ச பரம இரகசியங்களை அறிவிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஆகையால் வேறு எந்த தகுதியற்ற வார்த்தையும் அதிலிருந்து வருதல் கூடாது. நாவினால் கட்டிக்கொள்ளப்படும் திரளான பாவங்கள் கணக்கிட முடியாதவையாக உள்ளன. அதனால் குருவானவரின் உதடுகள் எல்லாத் தீமைகளிலிருந்தும் - உலக ரீதியான - பாவகரமான பேச்சுக்களிலிருந்தும் பரிசுத்தமாக்கப்படவேண்டியது எவ்வளவு அவசியமானது என்பதை உணர்ந்தே குரு தமது உள்ளரங்க, வெளியரங்கத் தூய்மையை கேட்டு சர்வேசுரனை மன்றாடுகிறார்.

(தொடரும்)

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

(இக்கட்டுரைத் தொடர் Rev. George A. Kelly எழுதிய "The Catholic Family Hand Book" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)

## 1. மகிழ்ச்சியான குடும்பம் (தொடர்ச்சி)

### கத்தோலிக்கக் குடும்பங்களின் தனித்தன்மை!

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகச் சிறந்த குடும்பங்களாக, உத்தம கத்தோலிக்கக் குடும்பங்களே திகழ்கின்றன என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஏனெனில் அதிக குழந்தைகளைக் கொண்டு தொடர்ந்து ஸ்திரமாகவும், பரித்தியாகத்துடனும் ஜீவிக்கும் கத்தோலிக்கத் தம்பதிகளைக் கொண்டவை அவை! இத்தகைய கத்தோலிக்கக் குடும்பங்களிலிருந்து தகுந்த பயிற்சி பெற்றவர்களாக வெளியேறிய பெரும்பாலான பிள்ளைகள், இராணுவத்திலும், தொழிலகங்களிலும், நாட்டின் பொருளாதார கட்டமைப்பு மற்றும் பொதுப்பணித் துறைகளிலும் சேர்ந்து, பொறுப்பு மிக்க பதவிகளில் மிகவும் திறம்பட பணியாற்றி வருவதை நாமறிவோம். இதற்காக அவர்களை உருவாக்கிய பெற்றோர்களையும், திருச்சபையையும் பாராட்ட வேண்டும்.



இந்த நவீன காலத்தில் கணவன் மனைவிக்கும் இடையே அரிதாகிப் போன பிரமாணிக்கமுள்ள உறவை கத்தோலிக்கக் குடும்பங்களில் காண்கிறோம். இக்குடும்பங்களில், பெற்றோரை பிள்ளைகள் பெரிதும் மதித்து நடந்து கொள்வார்கள். பலவீனமானவர்களை மற்றவர்கள் பாதுகாப்பர். குடும்பத்தினர் ஒவ்வொருவருடைய கண்ணியத்தையும், உரிமைகளையும் பற்றிய விழிப்புணர்வை அக்குடும்பங்களில் காணலாம். கத். பெண்மணிகள் பெற்றிருக்கும் உயரிய மரியாதையையும், அந்தஸ்து - அதிகாரமும் மற்றெந்த குடும்பங்களிலும் காணமுடியாத ஒரு சிறப்பு அம்சமாகும். இதன் முக்கிய காரணம்: நசரேத்தில் ஜீவித்த பரிசுத்த திருக்குடும்பத்தைக் கண்டுபாவிக்கும் விதத்தில் பரிசுத்த நிறைகற்பு தாய்மையின் புனிதத்தன்மை, தம்பதியரின் சமத்துவம், குடும்ப வாழ்வின் சுபாவத்துக்கு மேலான இறுதிநோக்கம் பற்றிய தெளிவுமே ஆகும். கத்தோலிக்கப் பெண்களுக்கு வழங்கப்படும் உயர்வைப் போன்றே, ஆண்கள் "கணவன்" என்றும், "தந்தை" என்றும் குடும்பத்தில் முதன்மையான அந்தஸ்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் காண்கிறோம்.

உங்களுடைய கத்தோலிக்க விசுவாசத்தின் ஞானபலம் உங்களுடைய குடும்ப ஜீவியத்தின் ஸ்திரமான தன்மையையும் நற்குணத்தையுமே சார்ந்துள்ளது என்பதை மறவாதீர்கள். குடும்ப ஜீவியத்தின் சீரிய குறிக்கோள்களைப் பற்றி விசுவாசிகளுக்கு அறிவிக்கும்போது, திருச்சபையானது மனித பலவீனம், சுயநலம் மற்றும் பாவத்தின் மீதான நாட்டம் ஆகியவற்றை கருத்தில் கொள்கிறது. இவற்றின் அடிப்படையிலேயேதான் குடும்ப வாழ்வின் உந்நதமான குறிக்கோள்களை விசுவாசிகளுக்குக் கற்பிக்கிறது. இந்த குறிக்கோள்களை சிறிது காலம் மறுப்பவர்களை, ஒரு நல்ல தாயைப் போல திருச்சபை மன்னித்து அரவணைக்கிறது. ஆனால், சிலர் போதிப்பது போல இப்பலவீனங்கள் தாய் தந்தையர் பேரிலும் சர்வேசுரன் கொண்டிருக்கும் முதன்மையான இடத்தை குறைக்கவோ அல்லது களங்கப்படுத்தவோ செய்யும் என்ற தப்பறையை ஒருபோதும் திருச்சபை ஏற்காது! பாவத்தை புண்ணியம் என்றோ, பலவீனங்களை நன்மை என்றோ அழைக்காது!

(தொடரும்)

**உன் மனைவி உன் வீட்டினருகில் மிகுந்த கனி தரும் திராட்சக் கொடிபோலிருப்பாள்.**
**உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப் போலிருப்பார்கள்.**

சங். 127:3.

# அர்ச். பத்தாம் பத்திநாதரின் திருச்சபையைக் குறித்தான ஆவல்கள்!

(அர்ச்.10–ம் பத்திநாதர் பாப்பரசர் திருச்சபை எப்படியிருக்கவேண்டும், நவீனர்களால் அது எவ்வாறு பாதிக்கப்படும் என்பதையும், அதனை எதிர்த்த பாப்பரசரின் முயற்சிகள் மற்றும் அவரது ஆவல்களைப்பற்றி வந்.மே. திஸ்ஸியர் தே மலரே ஆண்டகையவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் தமிழாக்கம் இங்கே வெளியிடப்படுகிறது. இந்தப் பிரசங்கம் 2003–ம் ஆண்டு நவம்பர் 16–ம் நாளன்று பிரான்ஸ் நாட்டு கோல்மா நகரில் அர்ச். ஜோசப் இல்லத்தில் நிகழ்த்தப்பட்டது. ஆர்.)

## 6. அர்ச்சிப்பு



*அர்ச்.10- ம் பத்திநாதர், திருச்பையானது மூன்று வழிகளில் அர்ச்சிக்கப்பட வேண்டுமென விரும்பினார்.*

### 1. குருத்துவத்தின் பரிசுத்ததனம்

*முதலில் குருத்துவம்பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று விரும்பிய அர்ச். 10 - ம் பத்திநாதர் அதற்காக மிக உந்நதமான அறிவுரைகளை கத்தோலிக்க குருகுலத்திற்கு எழுதினார். (1908ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் நாளன்று, தமது குருத்துவ பொன்விழா கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாக “Haerent Animo”என்ற மடலை எழுதினார்.) விசுவாசிகளும் கூட இம்மடலை படித்தறிவது மிக்கப் பயனைத் தரும்.*

### 2. திவ்ய நற்கருணை

*திவ்விய நற்கருணையை பெற்றுக் கொள்வது சம்பந்தமாக ஆணைகளை அர்ச். 10ம் பத்திநாதர் பிறப்பித்தார். ஜான்சனிசம் என்ற தப்பறையின் விளைவாக விசுவாசிகள் அடிக்கடி தேவ நற்கருணையை வாங்க தயக்கம் காட்டியதாலும், குழந்தைகள் 10 வயது முடிவதற்கு முன்பாக புதுநன்மை வாங்க அனுமதிக்கப்படாததாலும், அவர் தனது ஆணைகளின் மூலமாக மாற்றங்களைக் கொண்டு வந்தார். தான் சிறு பிள்ளையாக இருக்கும் போது மிகவும் வருந்தினார். பாப்பரசரின் அரியாசனத்தில் அமர்ந்து செய்த முதல் காரியங்களில் ஒன்று அனைத்து கத்தோலிக்க விசுவாசிகளும் அடிக்கடியும், விரும்பினால் அனுதினமும் திவ்ய நற்கருணை வாங்க அழைப்பு விடுத்ததுதான்! இது சம்பந்தமான ஆணை விசுவாசிகளுக்கு மெய்யான ஞான நிவாரணமாக இருந்தது. மேலும் படித்து அறியும் வயதை எட்டிய குழந்தைகளை தெய்வீக போஜன பந்திக்கு அனுமதித்தார்.*

*அப்போதைய ஜான்சனிசப் பதிதத்தால் பீடிக்கப்பட்ட கிறீஸ்தவ சமுதாயம் எப்படி இருந்திருக்கும் என்று நாம் உருவகப்படுத்தி பார்ப்பது இப்பொழுது நமக்குக் கடினமாக இருக்கிறது. இன்றோ, நாம் அதற்கு எதிர்மறையான சூழ்நிலைக்கு மாறிவிட்டோம். நவீன திருச்சபையில் எவரும் ஜீவிய அப்பத்தை கையில் சாதாரணமாக, அதுவும் பாவசங்கீர்த்தனம் செய்யாமல் வாங்கிக் கொள்கிறார்கள்! விசுவாசிகளே! கனமான இவ்விஷயத்தில் நாம் சீரிய முறையை கடைபிடிக்க வேண்டும். தேவ நற்கருணையை நாம் அடிக்கடி கூடுமானால் தினமும் வாங்க வேண்டும். அதே வேளையில் அடிக்கடி நல்ல பாவசங்கீர்த்தனமும் செய்ய வேண்டும்.*

### 3. தேவமாதாவின் மீதான பக்தி

*கடைசியாக, திருச்சபையை அர்ச்சிப்பதற்கு அதனை அதிகம் அழகுறச் செய்வதற்கு அவர் கையாண்ட வழிமுறை தேவதாயின் மீதான பக்தியை ஊக்கப்படுத்தியதே. 1904 பிப்ரவரி 2 ம் நாளன்று, பாப்பானவர் 9 ம் பத்திநாதர் தேவதாயின் அமலோற்பவத்தை வேத சத்தியமாக பிரகடனப்படுத்திய 50 ஆண்டுகள் நிறைவுறுவதை முன்னிட்டு, அர்ச். பத்தாம் பத்திநாதர்* “Ad Diem Illum Laetissimum” *என்ற மாதாவைக் குறித்தான சுற்றுமடலை வெளியிட்டார். இதை பரிசுத்த கன்னிகையைப் பற்றிய பெரிய சுற்றுமடல் என்று கூட சொல்லலாம். பின்னாளில் வந்த 12ம் பத்திநாதர் பாப்பரசர் தேவதாயின் மோட்சாரோபனத்தை வேதசத்தியமாக பிரகடனப்படுத்திய மடலை வெளியிட்டாலும், மாதாவின் பக்தி குறித்த விஷயத்தில் அர்ச். 10ம் பத்திநாதரின் இந்த மடலே சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. அதற்குப் பின் இதைப் போன்ற மடல் வேறு எதுவும் வெளிவந்ததில்லை. அதில், அர்ச். 10ம் பத்திநாதர், மாதாவின் ஞான தாய்மை* (Spiritual Maternity) *குறித்தும், இணை இரட்சண்யத்தைக் குறித்தும் “ஆடம்பரமாக” பிரகடனம் செய்யவில்லையெனினும் அதை மிகவும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்.*


(தொடர்ச்சி 23 ம் பக்கம் காண்க)

# குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு திறந்த மடல்

## - அதிமேற்றிராணியார் மிக வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை -

(கடந்த 42 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகிறது. இதனால் சாதாரண விசுவாசிகள் செய்வதறியாமல் திகைத்துபோய் உள்ளனர். அவர்களுக்கு வழிகாட்டும் விடிவெள்ளியாக அதிமேற்றிராணியார் மிக. வந். மார்செல் லெஃபவர் ஆண்டகை திகழ்கிறார். அவர் எழுதிய குழப்பத்திலிருக்கும் கத்தோலிக்கர்களுக்கு ஓர் திறந்த மடல் என்ற நூலின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. இது நிச்சயமாக குழம்பிப் போயிருக்கும் கத். மக்களின் மனங்களில் எழும் சந்தேகங்களுக்குப் பதிலாக அமையும் என்பதில் ஐயமில்லை. – ஆசிரியர்)

### (9) புதிய குருக்கள் (தொடர்ச்சி)



இந்த துர்மாதிரிகையான குருப்பட்டத்தில் முதல் பலிப்பொருள், தான் எதற்காக தன்னையே எக்காலத்துக்குமாக அர்ப்பணித்தேன் என்று அறியாத தெரியாத அந்த இளைஞன்தான். அப்படிப்பட்டவன் எப்படி விரைவிலேயே சில கேள்விகளைத் தனக்குத் தானே கேட்காமல் இருக்கமுடியும்? ஏனெனில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட "இலட்சியம்" நீண்ட காலத்திற்கு அவனைத் திருப்திப்படுத்த முடியாது; குழப்பமான அவனது அலுவல் விரைவில் சோர்வைத் தந்துவிடும். குரு என்பவர் அடிப் படையிலேயே விசுவாச மனிதர் ஆவார். அவர்தான் யார்? தனது அந்தஸ்து என்ன என்று அறியாமல் இருந்தாரென்றால், அவர் தன்மேலும், குருத்துவத்தின் மேலும் நம்பிக்கையிழப்பர்.

குருத்துவம் என்றால் என்ன என்பதற்கு அர்ச். சின்னப்ப ராலும், திரிதெந்தீன் பொதுச்சங்கத்தாலும் கொடுக்கப்பட்ட இலக்கணம் (definition) மாற்றப்பட்டு உள்ளது. குருவானவர் பீடத்திற்கு ஏறி பாவங்களுக்குப் பரிகாரமாக புகழ்ச்சியின் பலியை சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பவர் என்ற இலக்கணம் மாற்றப் பட்டுள்ளது. குருத்துவ நோக்கங்களின் கிரமம் சீரழிக்கப்பட் டுள்ளது. குருத்துவத்தின் முதல் தலையாய நோக்கம் சர்வேசுர னுக்கு பலியை ஒப்புக்கொடுப்பது. சுவிசேஷப் போதகம் இதற் கடுத்த இரண்டாவது நோக்கமாகும். ஆனால் நவீனத்தில் சுவிசேஷ போதகம் பலி செலுத்துதல், தேவதிரவிய அநுமானங் களை நிறைவேற்றுதலுக்கு மேலாக முதன்மை பெற்று, தன்னிலே முடிவுபெறும் செயலாகி விட்டது. இந்தப் பெரிய தப்பறை, கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆத்தும இரட்சண்யம் என்ற தனது இலக்கியங்களை இழந்துவிட்ட போதகம், திசைமாறி உலகத்திற்கு பிரியமான நோக்கங்களான போலியான சமூக நீதியையும், போலி விடுதலையையும் தேடுகிறது. இவை, முன்னேற்றம், வளர்ச்சி, உலகைக் கட்டியெழுப்புதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சமரசம் போன்ற புது பெயர்களில் அழைக்கப்படுகின்றன. இத்தகைய வார்த்தைகள் எல்லாவகையான புரட்சிகளுக்கும் வழிவகுக்கின்றன.

பீடத்தில் திவ்விய பலி செலுத்துவது என்பதே குருத்துவத்தின் முதல் நோக்கமாக இல்லாதிருப்பது, எல்லா தேவதிரவிய அநுமானங்களையும் ஆபத்துக்குள்ளாக்கும் தீமையை விளைவிக்கும். 'பங்குப் பொறுப்பாளரான' குருவும் அவரது 'குழுவும்', ஏற்கனவே தங்கள் வாழ்க்கையின் சுமையையும், அரசியல் அல்லது தொழில் சங்கங்களில் வேலைகளில் ஈடுபட்டுள்ள பொதுநிலையினரை அழைப்பார்கள். இவ்வாறு, சமூகப் போராட்டங்களில் ஈடுபடும் குருக்கள், அரசியல், திருச்சபை, குடும்ப மற்றும் சமூக அமைப்புகளை எதிர்த்து போராடுகிறார்கள். அவர்கள் எதையும் விட்டு வைப்பதில்லை. உண்மையிலேயே கம்யூனிசம் இத்தகைய குருக்களைவிட தீவிரமான தொண்டர்களைக் கண்டதில்லை.

ஒருநாள், கர்தினால் ஒருவரிடம் எனது குருமடங்களில் குருத்துவப் பயிற்சிபற்றிக் கூறிக்கொண்டிருந்தேன். குருமாணவர்களின் ஞான வாழ்வில் எல்லாவற்றிற்கும் மேலாக திவ்விய பலிபூசையின் வேதசாஸ்திரம் மற்றும் திருவழிப்

பாட்டின் ஜெபங்களில் ஆழமாக இடம்பெறச்செய்யும் விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டேன். அதற்கு அவர், "நீங்கள் செய்வது இன்றைய இளங் குருக்கள் விரும்புவதற்கு முற்றிலும் எதிராக இருக்கிறது. இப்பொழுதெல்லாம் நாங்கள் போதகத்தை வைத்துதான் குருத்துவத்தையே வரையறை செய்கிறோம்" என்று கூறினார். அதற்கு நான் மறுமொழியாக, "என்ன போதகம்? இந்த போதகம் தன் அடிப்படையும், அவசியமுமான திவ்விய பலியோடு தொடர்பற்றிருந்தால், அதனை எப்படி புரிந்துகொள்வது? அது என்ன - அரசியல் போதனையா? அல்லது சமூக மனித நேய போதகமா?" என்றேன்.

அப்போஸ்தலன் ஒருவன், சேசுக்கிறீஸ்துவை போதிப்பதை நிறுத்திவிட்ட தீவிரவாதியாகவோ, மார்க்சிஸ்ட் தொழில் சங்கவாதியாகவோ மாறிப்போவது சகஜம்தானே?

அவன் புதிய மறைபொருளான தேடுதல் தேவை, அதனை இந்த வழிகளில் கண்டடைகிறான். ஆனால் பீடத்தின் தேவ இரகசியத்தை இழந்து போகிறான். பின்னர் அவன் முற்றிலும் குழம்பிப் போனவனாய், "திருமணம்" செய்துகொள்வதையும், குருத்துவத்தைக் கைவிடுவதையும் கண்டு நாம் ஆச்சரியமடையத் தேவையில்லை. பிரான்ஸ் நாட்டில், 1970-ல் 285 குருப்பட்டங்களும், 1980-ல் 111 குருப்பட்டங்களும் நடந்தன. இவர்களில் எத்தனை பேர் உலகிற்கு திரும்பிவிட்டார்கள், மேலும் எத்தனை பேர் போவார்கள்? ஆக, மேற்கூறிய புள்ளிவிபரம்கூட குருக்களின் எண்ணிக்கை விழ்ச்சியை சரியாகக் குறிப்பிட்டுக் காட்டவில்லை. அந்த இளைஞர்கள் 'விரும்புவதாக' சொல்லப்பட்டது, அவர்களது ஆர்வத்தை திருப்திப்படுத்தவில்லை என்பது புலனாகிறது.

இதனை நிருபனம் செய்வது எளிது. திவ்விய பலிபூசை என்றால் என்ன என்பதை அவர்கள் அறியாததால் தேவ அழைத்தல்கள் இல்லை. அதனாலேயே "குருவானவர்" என்பவர் யார் என்பதை யாராலும் வரையறுக்க முடியவில்லை! மாறாக எங்கே திவ்விய பலிபூசை" அறியப்பட்டு, திருச் சபை எப்போதும் போதித்து வருவது போல சங்கை செய்யப்படுகிறதோ, அங்கே தேவ அழைத்தல்கள் மிகுந்துள்ளன. இதை எனது குருமடங்களிலேயே கண்கூடாக பார்த்திருக்கிறேன். நாம் செய்வதெல்லாம் என்றும் நிலைத்திருக்கும் சத்தியங்களை ஏற்றுக்கொள்வது மட்டுமே. விளம்பரம் செய்யாமலேயே தேவ அழைத்தல்கள் தாமாகவே எங்களிடம் வருகின்றன. எங்களின் விளம்பர வேலையை நவீனர்களே கவனித்துக்கொள்கிறார்கள். கடந்த 13 வருடங்களில் 187 குருப்பட்டங்களை அளித்துள்ளேன். 1983-ல் துவங்கி வருடா வருடம் 35-லிருந்து 40 குருப்பட்டங்களை வழங்கி வருகிறேன். ஈகோன், ரிட்ஜ்ஃபீல்டு (USA), ஸைய்ட்ஸ்கோஃபென் (ஜெர்மனி), பிரான்சிஸ்கோ ஆல்வரேஸ் (அர்ஜென்டினா), ஆல்பானோ (இத்தாலி) ஆகிய குருமடங்களில் சேர விண்ணப்பிக்கும் இளைஞர்கள் திவ்விய பலிபூசையினாலேயே ஈர்க்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு இளைஞன், மறு கிறீஸ்துவாக, நமதாண்டவரின் ஊழியராக பீடமேறிச் செல்வது என்பது எப்பேர்ப்பட்ட அசாதாரணமான வரப்பிரசாதம்! இதைவிட உன்னதமானது, பெரியது இந்த உலகத்தில் வேறு எதுவுமில்லை. இதற்காக, தனது குடும்பத்தையே விட்டு பிரிந்துவருவதும், குடும்பத்தை ஏற்படுத்துவதை கைவிட்டுவிடுவதும், உலகினைத் துறந்து, வறுமையை ஏற்றுக்கொள்வதும் தகுதியானதே!

ஆனால், திவ்விய பலிபூசையினாலே ஈர்க்கப்படும் இந்த ஈர்ப்பு இல்லையென்றால், எந்த பயனும் இல்லை. நான் வெளிப்படையாகச் சொல்கிறேன்: எந்த பயனும் இல்லை! ஆகையால்தான் மற்ற குருமடங்கள் காலியாக இருக்கின்றன!!!

(தொடரும்)

## குருக்களுக்காக வேண்டும் ஜெபம் !

**நித்திய குருவாகிய சேசுவே! உமது தாசராகிய குருக்களுக்கு எவரும் தீங்கு செய்யாதபடி அவர்களை உமது இருதயமாகிய தஞ்ச ஸ்தலத்தில் வைத்துக் காப்பாற்றியருளும். அனுதினமும் உமது திருச் சரீரத்தைத் தொட்டுவரும் அபிஷேகம் பெற்ற அவர்கள் கரங்களைக் கறைபடாமல் காப்பாற்றும். விலைமதிக்கப்படாத உமது திரு இரத்தத்தில் தோய்ந்து சிவந்திருக்கும் அவர்களுடைய இதழ்களை நிர்மல சுத்தமாய்க் காத்தருளும். உமது மாட்சிமை பொருந்திய குருத்துவத்தின் உன்னத அட்சரங்களால் முத்திரிக்கப்பெற்ற அவர்கள் இருதயங்கள் உலகப்பற்று இன்றி தூய்மையாயிருக்கச் செய்தருளும். உலகத் தீவினைகள் அவர்களை அணுகாதபடி உமது பரிசுத்த அன்பு அவர்களைச் சூழ்ந்து காக்கும் கேடயமாயிருக்கக்கடவது. அவர்களுடைய பிரயாசை ஏராளமான பலன் கொடுக்கும்படி ஆசீர்வதித்தருளும். யாராருடைய இரட்சண்யத்திற்காக உழைக்கிறார்களோ அவர்களே குருக்களுக்கு இவ்வுலகத்தில் ஆறுதல் சந்தோஷமும் பரலோகத்தில் அழகிய நித்திய கிரீடமுமாயிருப்பார்களாக. ஆமென்.**




அர்ச். 10-ம் பத்திநாதர் சர்வதேச குருமடத்தில் நடந்த குருத்துவ அபிஷேக சடங்கிற்கு அணிவகுத்து செல்லும் குருமாணவர்களும் குருக்களும்.





நடுப்பூசையில் அணிந்துகொள்ளுவதற்கு கழுத்து பட்டை (Stola) யையும் கட்டளை ஜெபப் புத்தகங்களையும் கையில் ஏந்திச் செல்லும் குருக்கள்.




குருத்துவ அபிஷேகம் பெறுவதற்கு கையில் எரியும் திரியுடன் பவனியாக செல்லும் தியாக்கோன்மார்கள்.




தியாக்கோன் பட்டம் பெறுவதற்கு பவனியாக செல்லும் உபதியாக்கோன்மார்கள் ''டால்மேட்டிக்'' என்ற உடுப்பை கையில் எடுத்துச் செல்லும் காட்சி.




குருமடத்திற்கு வெளியே அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பந்தலில் நடக்கும் குருத்துவ அபிஷேகத்தைக் காண பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருக்கும் விசுவாசிகள்.




குருத்துவ அபிஷேக சடங்கில் இஸ்பிரீத்துசாந்துவானவருடைய பிரசன்னத்தை மன்றாடி ''வெனிகிரியாத்தோர்'' என்ற லத்தீன் பாடல் பாடப்படுகிறது.



7

குருத்துவ அபிஷேகம் செய்யும் மேற்றிராணியாருடைய அறிவுரை களையும், எச்சரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டதின் அடையாள மாக ஓரடி முன்வந்து நிற்கிறார்கள்.




8

சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பிரார்த்தனை பாடப்படும் பொழுது தியாக்கோன், உபதியாக்கோன்மார்கள் சாஷ்டாங்கமாக பீடத்தின் முன்பு வீழ்ந்திருக்கும் காட்சி.



9

அர்ச். தாமஸ் அக்குவினாஸ் குருமட குருத்துவ அபிஷேக சடங்கின்போது வந். திஸ்ஸியே தே மலரே ஆண்டகையவர்கள் ஆசீர்வதிக்கிறார்கள்.



10

குருப்பட்டம் பெறவிருக்கும் தியாக்கோன்மார்கள் தலையிலே கை வைத்து ஜெபிக்கிறார்கள்.



11

பரிசுத்த தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்ட குருக்களின் கைகள் அலங்கரிக்கப்பட்ட வெள்ளைத் துகிலால் சுற்றப்பட்டிருக்கும் காட்சி.



12

குருமட ஆலயத்தின் முன்பாக புதிதாக அபிஷேகம் பண்ணப்பட்ட குருக்கள் மேற்றிராணியாரோடு நிற்க, குருமட சிரேஷ்டர் புதிய குருக்களை தந்தருளினதற்காக சர்வேசுரனுக்கு நன்றி செலுத்துகிறார்.

# செய்திகள்

## ★ குருக்கள் ஆண்டு அறிவிப்பு !

அர்ச். ஜான் மரிய வியான்னியார் மரித்து 150 ஆண்டு நிறைவடைவதை சிறப்பிக்கும் வண்ணமாக குருக்கள் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 19 – 6 – 2009 அன்று துவங்கி 2010 ஜுன் 9, 10, 11 ஆகிய நாட்களில் ரோமையில் நடைபெறும் பன்னாட்டு குருக்கள் மாநாட்டோடு நிறைவடையும். இந்த ஆண்டிற்கான அறிவிப்பை பாப்பரசர் 16 ம் ஆசீர்வாதப்பர் 2009 ஜுன் 16 ல் வெளியிட்டார். அன்று உலகமெங்குமுள்ள குருக்களுக்காக கடிதம் ஒன்றை எழுதி வெளியிட்டார்.

## ★ தூரின் திருத்துகில்!

நமதாண்டவரின் மரித்த சரீரத்தை சுற்றிய திருத்துகில் இத்தாலியில் உள்ள, தூரின் நகரில் திருஇருதய பேராலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அது, 2010ம் ஆண்டு ஏப்ரல் 10 முதல் 23 ம் நாள் வரை விசுவாசிகளின் வணக்கத்திற்கு வைக்கப்பட உள்ளது. பாப்பரசர் 16ம் ஆசீர்வாதப்பர் திருயாத்திரையாக அங்கு சென்று வணங்குவார் என்று தெரிகிறது.

## ★ மதச்சின்னங்களை அகற்ற சட்டம் !

கத்தோலிக்க நாடாகத் திகழ்ந்த ஸ்பெயினில் இராணுவத்தளங்கள், பொது மருத்துவமனைகள், சிறைக்கூடங்கள், அரசு பள்ளிகள் போன்ற இடங்களிலும் மற்றும் அரசு விழாக்களிலும் கத்தோலிக்க மதச் சின்னங்களான அர்ச்சிஷ்டவர்களின் படங்கள், சுரூபங்கள், சிலுவைகள் ஆகியவை பயன்படுத்தப்டுவதை தடை செய்ய சட்டம் கொண்டு வர அரசு பரிசீலித்து வருவதாக சட்ட அமைச்சர் பிரான்சிஸ்கோ கமானோ கூறினார்.

## ★ விற்கப்படும் தேவாலயங்கள் !

கனடா நாட்டின் குயூபேக்கிலில் (Quebec) பழம் பெருமை வாய்ந்த ஆலயங்கள் படிப்படியாக விற்கப்பட்டு, நூலகங்களாகவும், பொழுதுபோக்கு கலை அரங்குகளாகவும் மியூசியங்களாகவும் மாற்றப்பட்டு வருகிறது. கடந்த 50 வருடங்களில் வேதத்தை அனுசரிப்பவர்களின் எண்ணிக்கை 80% லிருந்து 5% ஆக குறைந்துவிட்டதே இதற்குக் காரணம்!

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

*தேவதாயின் ஞான தாய்மைக்கு (தேவமாதா மனுக்குலத்தின் தாய் என்ற உண்மை) அஸ்திவாரம் அவர்களுடைய தெய்வீகத் தாய்மையாகும். அது எப்படியெனில், அவர்கள் நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் தாயாக இருப்பதால் சர்வேசுரனுடைய தாயாகவும், மனுக்குலத்தின் தாயுமாய் இருந்து நமது தேவைகளை கவனித்து தனது ஜெபத்தினாலும், மன்றாட்டுகளாலும் எப்போதும் உதவி செய்ய தயாராய் இருக்கிறபடியினாலேயாகும்.*

*"இணை இரட்சகர்" என்ற தேவதாயின் அந்தஸ்து சிலுவையடியில் தனது குமாரனோடு அவர்கள் சம்பாதித்த பேறுபலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. சிலுவைப்பாடுகளில் சேசுநாதர் பெற்ற பேறுபலன் களையெல்லாம், தேவமாதாவும், தனக்கே உரித்தான வகையில் சம்பாதித்தார்கள். அது எப்படியெனில் சேசுநாதர் மனிதராய் இருக்கும் அதே சமயத்தில் சர்வேசுரனாகவும் இருக்கிறபடியால், நீதியின் முறைமையின்படி இப்பேறுபலன்களை சம்பாதித்தார். இதை* "de condigno" *பலன் என்றும், மாதா சிருஷ்டியாக மாத்திரம் இருக்கிறபடியால்,* "de congruo" *அதாவது சிநேக பந்தனத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பலனாகும்.*

*மெய்யாகவே சேசுநாதர் சுவாமி தனது சிலுவைப்பாடுகளில் சம்பாதித்த பலன்களை எல்லாம், தேவதாயும் தன் குமாரனோடு இணைந்து பாடுபட்டதால் பெற்றுக்கொண்டார்கள். இதைத்தான் அர்ச். 10 ம் பத்திநாதர் அறிக்கையிடுகிறார். ஏற்கெனவே எண்ணற்ற அர்ச்சிஷ்டவர்கள் குறிப்பாக அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் கூறியிருப்பதை அர்ச். 10ம் பத்திநாதர் அதிகாரப் பூர்வமாகக் கற்பிக்கிறார்.*

*மேற்சொன்னபடி , "தேவமாதா சர்வேசுரனின் தாயாகவும், மனுமக்களின் தாயாகவும்" இருக்கிறார்கள், மற்றும் "இணை இரட்சகர் " என்ற அடிப்படையிலிருந்து சேசு கிறீஸ்துவுடனான மத்தியஸ்தியாகவும், நமதாண்டவரின் வரப்பிரசாதங்களை பகிர்ந்தளிப்பவராக இருக்கும் மாதாவின் அனைத்துலக மத்தியஸ்தம்* (Universal Mediation) *வெளிப்படுகிறது. (அர்ச். 10ம் பத்திநாதர்* "Co - Redemptrix" *என்ற பதத்தைப் பயன்படுத்தாமல், இரட்சகரோடு இணைந்து செயல்பட்டவர் என்ற பொருள்தரும்* "Co - Reparatrix" *என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் என்பதை அறிக!)*

*இந்த அருமையான போதகம் அர்ச். 10ம் பத்திநாதர் எழுதிய "Ad Diem Illum" என்ற சுற்றுமடலில் விவரிக்கப்படுகிறது.*

*(தொடரும்)*

***கேள்வி:*** ‘‘கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்’’ என்பது சுவிசேஷ வாக்கு. ஆனால் நவீன திருச்சபையில் நீதிமன்றங்கள் அமைத்து, சில நேரங்களில் ‘‘விவாகரத்து’’ கொடுக்கிறார்களே. அதனுடைய அர்த்தம் என்ன?




***பதில்:*** ‘‘மெய்விவாகம்’’ என்ற தேவதிரவிய அநுமானம் சரியாக நிறைவேற்றப்பட்டு, தாம்பத்ய உறவில் இணைந்தவர்களைப் (Ratum et Consummatum) பிரிக்க திருச்சபைக்கோ அல்லது வேறு எவருக்கோ அதிகார மில்லை. திருச்சபையில் ‘‘விவாகரத்து’’ என்று மக்கள் கேள்விப்படுகிற வார்த்தையின் உண்மையான அர்த்தம் என்னவென்றால்; நடந்தேறிய – பார்வைக்கு ‘‘ திருமணம்’’ போல் தோன்றும் ஒரு காரியம், திருமணத்திற்கு மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் அம்சங்கள் ஏதேனும் குறைவாக இருப்பதை முன்னிட்டு அல்லது மறைந்திருக்கும் விக்கினத்தின் காரணமாக அக்காரியம் மெய்யான ‘‘திருமண பந்தம்’’ அல்ல என்று அறிவிப்பதேயாகும். அதாவது இந்த தம்பதியினரிடையே மெய்யான திருமணப் பிணைப்பு ஒருபோதும் இருந்ததில்லை. திருமணம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென்று திருச்சபையில் ஒரு நீதிமன்றம் (Ecclesiastical Tribunal) உண்டு. ஆனால் சிலர் நினைப்பது போல் இது விவாகரத்துக்கான நீதிமன்றம் அல்ல.

ஆனால் நல்லொழுக்கத்தையும், திருமணத்தின் பரிசுத்ததனத்தையும் உதாசினப்படுத்தி வரும் இந்த நவீன சங்கச் சபையின் அதிகாரிகள் சிலர் (பொது நிலையினர் உட்பட) உலகரீதியான சிறிய காரியங்களுக்கும் கூட விவாகரத்துக் கொடுத்து வருவது பெரிய துர்மாதிரிகை என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தத் துர்மாதிரிகைகள் மறைய ஜெபிப்போமாக!

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலிபூசை நடைபெறும் இடங்கள்:

**பாளையங்கோட்டை:**
அர்ச். தமத்திரித்துவ ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201.

**சிங்கம்பாறை:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 2586201..

**கிறீஸ்துராஜபுரம்:**
கிறீஸ்துராஜா ஆலயம்,
தொலைபேசி எண்: 9442625158

**நாகர்கோவில்:**
அர்ச். தோமையார் ஆலயம்.
தொலைபேசி எண்: 0462 - 2572389, 9442625158

**தூத்துக்குடி:**
அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9942707246.

**ஆசாரிப்பள்ளம்:**
அர்ச். அந்தோணியார் ஆலயம்.
தொலைபேசி எண்: 9442625158.

**திருச்சி :**
அர்ச். சூசையப்பர் சிற்றாலயம்
No-14/2, 3-வது மெயின் ரோடு
ஸ்ரீனிவாசா நகர், திருச்சி - 620 017.
தொலைபேசி எண்: 0431 - 2782798.

**சென்னை:**
அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிவளாகம்.
தொலைபேசி எண்: 044-22355389; 9791134344; 9445122353; 9444685103.
**ஞாயிறு பூசை நேரம் : மாலை 6.00 மணி**

**ஆர். என். கண்டிகை:**
ஜென்ம இராக்கினி ஆலயம்.
தொலைபேசி எண்: 9444122316.

The Society of St. Pius X

#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.
Ph: 0462-2586201; 2572389. Mobile: 9442625158. e-mail: rajakumar@sspx.net